
விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*




# வலம்புரி

## Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 25 புதன்கிழமை (10.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 266

# வன்னி படைத் தலைமையகம் மீது புலிகள் வான், தரைவழித் தாக்குதல்

## யாழ்ப்பாணத்துக்கு ஜனவரி முதல் 24 மணிநேர மின்சாரம் கிடைக்கும்

### யாழ்.மாணவர்களுக்கு ஜனாதிபதி உறுதியளிப்பு

(கொழும்பு)

தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளிற்குச் சென்ற யாழ்ப்பாண மாணவர்கள் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து யாழ். மாணவர்களின் கல்வி நிலை குறித்து எடுத்துக் கூறினர்.

ஜனாதிபதியுடனான இச் சந்திப்பில் தேசிய மட்ட பாடசாலைகளிற்கிடையிலான விளையாட்டுப் போட்டிக்கென சென்றுள்ள சுமார் 340 மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, பந்துல குணவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் யாழ்ப்பாண மாணவர்கள் தமது கல்வி நிலையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுச் சத்தங்களால் வவுனியா அதிர்ந்தது

(வவுனியா நிருபர்)

**வவுனியாவிலுள்ள வன்னிப் பிராந்திய படைத் தலைமையகம் மீது நேற்று அதிகாலை 2.50 மணியளவில் விடுதலைப் புலிகளினால் தரை, ஆகாயத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. இத் தாக்குதலில் 10 விடுதலைப் புலிகளும் 10 இராணுவத்தினரும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவத்தில் 10 இராணுவத்தினரும் 8 பொலிஸாரும் 5 விமானப் படையினரும் காயமடைந்துள்ளனர்.** *(10ஆம் பக்கம் பார்க்க)*

## விடுதலைப் புலிகளின் விமானம் நேற்று சுட்டு வீழ்த்தப்பட்டது

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் விமானமொன்றை தாம் சுட்டு வீழ்த்தியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

வவுனியாவில் தாக்குதல் நடத்திவிட்டு திரும்பிக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் விமானங்களை கட்டுநாயக்கவிலிருந்து புறப்பட்ட தமது விமானங்கள் பின்தொடர்ந்து சென்று ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன் மூலம் ஒரு விமானம் அழிக்கப்பட்டதாக விமானி உறுதிப்படுத்தியுள்ளார் என அவர் தெரிவித்தார்.

வவுனியா தாக்குதல்கள் குறித்து இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளதாவது, நேற்று விடிவதற்கு முன்பாக வவுனியாவிலுள்ள பொலிஸ் மன்றும் பாதுகாப்பு படைகளின் வளாகத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த முயன்றனர். அதிகாலை 2.50 மணியளவில் இராணுவ வளாகம் *(10ஆம் பக்கம் பார்க்க)*

## வவுனியா தாக்குதலை ஆராய இந்திய இராணுவ நிபுணர் குழு

(வவுனியா)

வவுனியா படைத் தலைமையகம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை நடத்திய ஆட்லறி மற்றும் வான் தாக்குதல்களினாலான மரபு வழி தாக்குதலில் இந்தியா வழங்கிய இந்திரா ராடர், அதற்கான கட்டுப்பாட்டு அறை ஆகியவை சேதமடைந்தமை தொடர்பில் ஆராய தொழில்நுட்பவியலாளர் குழு ஒன்று கொழும்புக்கு வரவுள்ளதாக இந்திய தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இலங்கை வான்படைக்கு புதிய ராடர் வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பது குறித்தும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் இக் குழு பேச்சு நடத்த *(10ஆம் பக்கம் பார்க்க)*

## ராடர் கண்காணிப்பாளர்கள் இருவர் தாக்குதலில் காயம்

(கொழும்பு)

வவுனியாவில் இராணுவ மற்றும் விமானப் படைக் கூட்டுப் படைத் தளம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியபோது அங்கு பொருத்தப்பட்டிருந்த இந்திய ராடர்களை பராமரிப்பதற்காக தற்காலிகமாகத் தங்கியிருந்த இரண்டு இந்திய தொழில்நுட்பவியலாளர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உயிராபத்துக்கள் ஏதும் ஏற்படக்கூடிய காயங்கள் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (சி)

## வவுனியா ராடர் தளம் தாக்கி அழிப்பு வானூர்திகள் பாதுகாப்பாக திரும்பின

### விடுதலைப் புலிகள் அறிவிப்பு

(கிளிநொச்சி)

வவுனியாவில் அமைந்துள்ள படைத் தலைமையகத்தின் மீது கரும்புலிகள் நடத்திய தாக்குதலில் அங்கிருந்த கண்காணிப்பு ராடர் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. வான் புலிகளின் வானூர்திகளும் தளத்தின் மீது தாக்குதல் நடத்திவிட்டு பாதுகாப்பாக திரும்பியுள்ளன.

படைத் தளத்தின் மீது கேணல் கிட்டு பீரங்கிப் படைப் பிரிவினர் நடத்திய செறிவான ஆட்டிலறித் தாக்குதலில் படையினருக்கு பேரழிவு ஏற்பட்டுள்ளது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் அமைந்துள்ள படைத் தளத்தின் மீது நேற்று அதிகாலை நடத்திய தாக்குதல்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வத் தகவல்கள் வருமாறு,

படையினரின் வன்னித் தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள வான் படையினரின் வான் *(10ஆம் பக்கம் பார்க்க)*



வவுனியா இராணுவத் தலைமையகம் மீது தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அதன் தலைவர் வே.பிரபாகரனுடன் எடுத்துக் கொண்ட படம். *(படம்: தமிழ்நெற்)*





வவுனியா இராணுவத் தலைமையகத்தினுள் காணப்படும் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் சடலத்தையும் விடுதலைப் புலிகளிடமிருந்து இராணுவத்தினரால் மீட்கப்பட்ட ஆயுதங்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்: பாதுகாப்பு அமைச்சு)*

# வரலாற்றில் மிக மோசமான யுத்தம் வட பகுதியில் நடைபெற்று வருகிறது

## சம்பந்தன் எம்.பி. நாடாளுமன்றத்தில் உரை



(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் என்றும் இல்லாத அளவு மோசமான யுத்தம் தற்பொழுது வட பகுதியில் நடந்து வருவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கூறினார்.

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் வன்னியில் நடைபெறும் மோதல்கள் தொடர்ந்து உக்கிரமடைந்து வருகின்றது.

இந்த மோதல்களால் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கொல்லப்படும் அபாயம் தோன்றியுள்ளது. இவ்வாறான கொடிய யுத்தம் இலங்கையின் வரலாற்றில் ஒருபோதும் நடைபெற்றிருக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கும் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இதனை விட ஏனைய இடங்களையும் இணைத்துப் பார்த்தால் சுமார் 2 இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

தற்பொழுது ஆரம்பித்திருக்கும் பருவப் பெயர்ச்சி மழையால் ஏற்கனவே மர நிழல்களின் கீழ் தங்கியிருந்த மக்கள் தங்குவதற்கு இடமின்றி பரிதவிக்கின்றனர். மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காது சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையில் தற்பொழுது வடக்கில் அரசாங்கம் யுத்தத்தை முன்னெடுத்துள்ளது.

சிங்களவர்களின் உரிமையைத் நாம் கோரவில்லை. தமிழர்களின் உரிமைகளையே கோருகின்றோம். எனினும் தொடர்ந்து ஆட்சியிலிருக்கும் அரசாங்கங்கள் தமிழர்களின் உரிமைகளை வழங்க மறுத்தமையாலேயே தனிநாடு கோர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதாகச் சம்பந்தன் குறிப்பிட்டார்.

மனித உரிமைகளைப் பாதுகாக்காத அரசாங்கம் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளுக்கும் உரிய ஒத்துழைப்பு வழங்குவதில்லை. இதனால்தான் சர்வதேச மாண்புமிக்கோர் குழு நாட்டை விட்டு வெளியேறியது.

ஆனாலும் மனித உரிமைகளைத் தாம் பாதுகாக்கின்றோம் என சர்வதேச சமூகத்திடம் காண்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. இதற்காகவே சாட்சிகளை பாதுகாப்பது தொடர்பான பிரேரணை ஒன்றை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் முன்வைத்தது.

இந்துப் பிரேரணை தொடர்பாக இரண்டு நாள்கள் விவாதங்கள் நடத்தப்பட்ட போதிலும் தற்போது அது இறந்து போய் விட்டது என சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கூறினார்.

நாட்டின் இறைமையைப் பாதுகாக்கின்றோம். எனக் கூறிக் கொண்டு அரசாங்கம் மனித உரிமைகளை மீறி வருவதாகவும் மனித உரிமைகளும் இறைமைக்குள் உள்ளடங்குகின்றன என்பதை ஏற்றுக் கொள்ள அரசாங்கம் தயாரில்லை எனவும் தெரிவித்த சம்பந்தன், யுத்தத்தை முடிபுக்குக் கொண்டு வந்து மக்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். (ச-5)

## நீராவியடியில் சடலமாக மீட்கப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நீராவியடியில் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்ட இருவரும் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

நீராவியடி மணிக்கூட்டு ஒழுங்கையில் ஞானேஸ்வரக் குருக்கள் நாகேஸ்வரிஅம்மா (வயது-49) அவரின் மகனான மனோராஜ் (வயது-10) ஆகிய இருவரும் அவர்களின் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணையை யாழ்ப்பாண நீதிமன்ற நீதிபதி வசந்தசேனன் நேற்று மேற்கொண்டார். சடலங்களின் தலையில் காயங்கள் காணப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இறந்த பெண் அணிந்திருந்த காப்பு, சங்கிலி, தோடு மற்றும் மூக்குத்தி ஆகிய ஆபரணங்களைக் காணவில்லை என்றும் கூறப்பட்டது.

இந் நிலையில் அவர்கள் இருவரும் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் இது தொடர்பான மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் சட்ட வைத்திய அதிகாரிக்குப் பணித்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)


### தவறிவிட்டது

வளாக வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியுடைய நவரட்ணம் இராஜேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (722913264 V)08.09.2008 திங்கட்கிழமை பலாலி வீதியில் திருநெல்வேலிக்கும் யாழ்.நகரப் பகுதிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது.

கண்டெடுத்தவர்கள் 'ஒளி அழகன்' ஸ்ருடியோ, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

T.P. இல. 077 9587256 (1657)




முத்திரைச் சந்தி செம்மணி வீதியிலுள்ள கோகிந்தராஜா என்பவரின் வீட்டில் வைத்து அழுங்கு ஒன்று பிடிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டுக்குச் சென்ற அழுங்கு பிடிக்கப்பட்டு மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. அதனைப் பெருமளவான மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அழுங்கையே படத்தில் காண்கிறீர்கள்.


### கலாலயா

பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

- **3 மாத கால** கேக் ஐசிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம், பப்றிக் வர்ணம் தீட்டுதல், பூவேலை, கைவேலை, Saree Work.

  மேற்படி பயிற்சிக்காலத்தின் நடுப்பகுதியில Facial, மணமகள் அலங்கார வகுப்புகள் ஆரம்பமாகும்.
- தையல் அடிப்படை அறிவு அற்றவர்களுக்கான **6 மாத கால** உடை தயாரித்தல் வகுப்புகள்.
- தையல் தெரிந்தவர்களுக்கான **இருவாரகால** சாறி பிளவுஸ், பஞ்சாபி, கவுண், சட்டை, Skirts தைத்தல்.
- **இருவாரகால** சேலையில் வர்ணம் தீட்டல் (Saree Painting) வகுப்புகள்.

**சனி ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 14-09-2008**
**கிழமைநாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 15-09-2008**

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம் பதிவாளர்.


### மரண அறிவித்தல்

**ஞானேஸ்வரக் குருக்கள் நாகேஸ்வரி அம்மா, ஞானேஸ்வரக் குருக்கள் மனோராஜ்**

நீராவியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஞானேஸ்வரக் குருக்கள் நாகேஸ்வரி அம்மா, ஞானேஸ்வரக் குருக்கள் மனோராஜ் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை 4 ஆம் ஆண்டு மாணவன்) ஆகியோர் 08.09.2008 அன்று அகால மரணமாகி விட்டனர்.

இவர்கள் ஞானேஸ்வரக் குருக்களின் அன்பு மனைவியும்; அன்பு மகனும், கண்டி நாகேந்திரக் குருக்களின் அன்பு மகளும்; பேரனும், வேலணை நா. யோகீஸ் வரக் குருக்களின் மருமகளும்; பேரனும் ஆவர்.

அன்னார்களின் பூதவுடல்கள் 09.09.2008 நேற்று மாலை 6 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

நா.அமிர்தாம்பிகை அம்மா,
நா.பாலசுப்பிரமணியக் குருக்கள்
மற்றும் சகோதரர்கள்

நாகேந்திர பீடம்,
48, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, நீராவியடி.,

(1660)


### இரசாயனவியல் வகுப்புக்கள் கோப்பாயில் ஆரம்பம்

| | | |
|---|---|---|
| A/L | 2009 | PHYSICAL CHEMISTRY |
| A/L | 2010 | THERMO CHEMISTRY |

கந்தசுவாமி கோவில் அருகாமை
கோப்பாய் வடக்கு
கோப்பாய்

தொடர்பு :- 077 4351909

(C-1513)

# இன்று ஒரு தகவல்

## நல்லபெயர் வாங்குவது எப்படி?

"நான் நிறைய நல்ல காரியங்களெல்லாம் செய்து கொண்டிருக்கிறேன். இருந்தாலும் எனக்கு ஒரு பெரிய குறை!" என்றார் ஒருவர்.

"என்ன குறை" என்று கேட்டார் இன்னொருவர். என்னை யாருமே நல்லவன் என்று சொல்வதில்லை! அதுதான் குறை! என்றார் அவர்.

நல்ல செயல்களை செய்வதென்பது வேறு! நல்லவன் என்று பெயரெடுப்பது வேறு! நல்ல பெயர் வாங்குவது என்றால் சும்மாவா? அதுசரி... எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்குவது எப்படி?

இதற்கு ஒரு அனுபவசாலி (டேல் கார்னர்) எட்டு வழிகளைச் சொல்கிறார். எது நம்மால் முடிகிறதோ அந்த வழியில் போய்ப் பார்க்கலாம். முதலாவது வழி மற்றவர்களை உண்மையாகவே பாராட்டுவதற்குப் பழக வேண்டும் என்கிறார்.

ஆனால் நம்மில் பலபேர் அடுத்தவர்கள் ஏதாவது ஒரு நல்லகாரியம் செய்தால், அவர்களை பாராட்டுவதற்குப் பதிலாக அவர்கள் மீது பொறாமைப்பட ஆரம்பிக்கிறோம்! அல்லது அவர்களிடம் பேசுவதை நிறுத்திக்கொள்கிறோம்.

அதனால் நமது உடம்பும் பெயரும் கெட்டுப்போகிறது. இரண்டாவது வழி பிறர் மேல் உண்மையாகவே அக்கறை கொள்ள வேண்டும் என்பது. உங்கள் பக்கத்தில் இருப்பவருக்கு லேசான தலைவலி என்று சொல்கிறார். நீங்கள் மாத்திரை வைத்திருந்தால் அதில் ஒன்றைக் கொடுத்து உதவுங்கள் அதனால் ஒன்றும் குறைந்து விடப்போவதில்லை.

அடுத்தவர்கள் தவறு செய்துவிட்டால் அதை மறைமுகமாக சுட்டிக்காட்ட வேண்டும். "ஐயையோ, இப்படிச் செய்துவிட்டீர்களே!" என்று சொல்லக்கூடாது. தவறு என்பது திருத்திக் கொள்ளக்கூடியது தான் என்பதை அவருக்கு உணர்த்தவேண்டும். இனிமேல் "இது மாதிரி நடக்காமல் பார்த்துக்கொள்ளலாம்" என்று சொல்ல வேண்டும்.

உங்களுக்கு எதிரில் இருப்பவர்களை அலட்சியப்படுத்தக்கூடாது! அவரும் முக்கியமானவர்தான் என்பதை அவரே உணரும் அளவுக்கு நீங்கள் நடந்துகொள்ள வேண்டும்.

அவருடைய ஆலோசனைகளையும் அடிக்கடி கேளுங்கள். "இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்று கேளுங்கள்.

அவரையும் பேசுவதற்கு ஊக்கப்படுத்துங்கள். நீங்கள் மட்டுமே பேசிக்கொண்டிருக்காதீர்கள். அவர் பேசுவதையும் பொறுமையாகக் கேளுங்கள். அப்பொழுது தான் உங்கள் மீது அவருக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் வரும்.

ஒரு கடுமையான வாக்குவாதம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக்கொண்டால் அந்த வாக்குவாதங்களிலிருந்து ஒதுங்குவது தான் நல்லவழியாம்.

இன்னொரு விஷயம் என்னவென்றால்... அடுத்தவர்களை மகிழ்ச்சியடைய வைப்பது மூலமாக நாமும் மகிழ்ச்சியடைகிறோம் என்பதை நன்றாக புரிந்துகொள்ள வேண்டும்.

சிலருக்கு அடுத்தவர்களை அதிர்ச்சியடையவைத்து வேடிக்கை பார்ப்பதில் ஒரு தனி சுவாரஸ்யம் உண்டு. அதெல்லாம் மிகவும் தவறு.

இன்னொரு முக்கியமான பொயின்ற், ஒருவருக்கு அவரது பெயர் மட்டும் தான் அவரைப் பொறுத்தவரை மிகவும் இனிமையான வார்த்தை என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டுமாம்.

அதனால் அவர் பெயரை எழுதும்போதோ சொல்லும் போதோ சரியாக சொல்லவேண்டும். அது அவர்களுக்கு சந்தோஷமாக இருக்கும். நல்ல பெயர் வாங்குவது எப்படி என்பதற்கு ஒரு வெளிநாட்டு நிபுணர் சொல்லியுள்ள யோசனைகள் தான் இவை.

இதை உங்களிடம் சொல்லமுதல் இன்னொருவரிடம் சொல்லியிருந்தேன். அந்த அம்மா நான்கு நாட்கள் கழித்து கோபமாக வந்தார்.

"சேர்! நீங்கள் சொன்ன யோசனைகளில் ஒன்றை மட்டும் கடைப்பிடித்தேன். அதனால் எனக்கு நல்ல பெயர் வரவில்லை. கெட்ட பெயர்தான் வந்தது!" என்றார். "என்ன செய்தீர்கள்?" என்றேன்.

"என் வீட்டுக்காரரை அவர் பெயர் சொல்லி கூப்பிட்டேன்" என்றார். "நமது பழக்கவழக்கத்திற்கு அது சரியாக இருக்காதே" என்றேன். "அவர் பெயரைச் சொன்னது கூட அவருக்கு வருத்தம் இல்லை! அதை செல்லமாக சுருக்கிக் கூப்பிட்டேன். அதுதான் அவருக்கு வருத்தமாம்!" என்றார். "அவர் முழுப்பெயர் என்ன?" என்று கேட்டேன். "மாடசாமி!" என்றார் அந்த அம்மா.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு பாதுகாப்பளிக்குக

## பரீட்சை ஆணையாளர் பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகளின் மூன்றாவது கட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. இந்நிலையில் பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க பொலிஸ்மா அதிபர் காமினி ஜயவிக்கிரம பெரேராவிடம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் கடந்த காலங்களில் பல்வேறு அழுத்தங்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுத்தனர். மூன்றாவது கட்டப் பணிகளின் போதும் இவ்வாறான இடையூறுகளுக்கும் முகம் கொடுக்க நேரிடலாம் என்று மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடவுள்ள ஆசிரியர்கள் பரீட்சைகள் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் விடைத்தாள் மதிப்பீடுகளை மேற்கொண்டமையினால் மூன்றாவது கட்ட மதிப்பீட்டு பணியின் போது அவ்வாறான அசாதாரணங்களுக்கு முகம் கொடுக்காத வகையில் மதிப்பீட்டு பணியை மேற்கொள்வதற்கு ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறும் பரீட்சைகள் ஆணையாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

விடைத்தாள்கள் மதிப்பீட்டின் முதலாம், இரண்டாம் கட்ட பணிகளின் போது மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்கள் பரீட்சைகள் திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளதுடன் மூன்றாவது கட்டப் பணிகளை இடையூறு இன்றி முன்னெடுத்துச் செல்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஓ)

# தேர்தல் மோசடி குறித்து சாட்சியமளிக்க மாவட்ட செயலக அதிகாரிகள் தயார்

## மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா

(கொழும்பு)

வடமத்திய மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற தினத்தன்று மாவட்டச் செயலகத்திற்குள்ளேயே வாக்கு மோசடிகள் இடம்பெற்றதாக வடமத்திய மாகாண சபையின் எதிர்கட்சித் தலைவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன் தேர்தல் நடைபெற்ற தினத்தன்று மேலதிகமாக எழுபது வாக்குப் பெட்டிகள் அநுராதபுரம் மாவட்ட செயலக கட்டிடத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. மாவட்ட செயலகத்தில் வாக்குகளை எண்ணும் கடமையிலிருந்த அதிகாரிகள் பலரும் உள்ளே நடைபெற்ற முறைகேடுகள் பற்றி எனக்கு அறியத் தந்துள்ளதுடன் தமக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கும் சந்தர்ப்பத்தில் அவை பற்றி சாட்சியம் அளிக்க முன்வருவதாகவும் வாக்குறுதியளித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் அநுராதபுரம் அஷோக ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இங்கு தொடர்ந்து கூறியதாவது பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்க இம்முறை ஒரு இலட்சத்து ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார். இவர் முதலாவது தடவை முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடும் போது அமோக வரவேற்பிருந்தும் கூட எண்பதினாயிரம் விருப்பு வாக்குகளையே பெற்றிருந்தார். இம் முறை அவருக்கான ஆதரவு குறைந்திருந்த அதேவேளை அவருடைய அணியினரே அவரை எதிர்த்து பிரசாரம் செய்தனர். இந்நிலையில் முன்பு பெறாதளவு விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

என்னையும் எனது வேட்பாளர் குழுவினரையும் நம்பி வாக்களித்த மக்களை நாம் கைவிடப் போவதில்லை. நான் அநுராதபுரத்தில் வீடொன்றை வாங்கி இங்கு நிரந்தரமாக வசிக்க ஆரம்பித்துள்ளதுடன் இங்கு வாக்காளராகவும் பதிவு செய்து கொண்டுள்ளேன்.

நான் முதலமைச்சராகாவிட்டாலும் எதிர்கட்சித் தலைவராக இருந்து கொண்டு தேர்தல் காலத்தில் நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற ஏனைய உறுப்பினர்களுடன் ஒன்றுபட்டு செயற்படத் தீர்மானித்துள்ளேன். (ஓ)

# இராசி பலன்

10.09.2008
(ஆவணி 25, புதன்கிழமை
பூராடம் முன்னிரவு 6.40 மணிவரை
தசமி பிற்பகல் 12.31 மணிவரை
இராகுகாலம்-12.03-01.33 மணிவரை
சுபநேரம்-04.33-06.03 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சரீரப்பிரயாசை, பிரயாணம், கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு. |
| இடபம் | வீண்பகை, காரிய தடங்கல், ஆரோக்கியக்குறைவு, பொருள் விரயம். |
| மிதுனம் | களஸ்திர நன்மை, தேகநலன், முயற்சிகைகூடும், சத்துரு ஜெயம். |
| கடகம் | எடுத்தகாரியம் கைகூடும், உற்சாகம், பொருள் சேர்க்கை, மனமகிழ்ச்சி. |
| சிங்கம் | கௌரவக்குறைவு, தொழிலில் மந்தநிலை, குடும்பக்கவலை, பணக்குறைவு. |
| கன்னி | தன்னம்பிக்கைக்குறைவு, உறவினர் சந்திப்பு,உடல்நலக்குறைவு, தொழில் ஆரம்பம். |
| துலாம் | கூட்டுமுயற்சி, இனிய சம்பவம், உறவினர் வருகை,கீர்த்தி. |
| விருச்சிகம் | முயற்சி தாமதம், மனோசங்கடம், தனவிரயம், போசன சுகக் குறைவு. |
| தனுசு | நல்லமுயற்சி. தெய்வசிந்தை, சயனசுகம், தேகநலன். |
| மகரம் | சோம்பல் நிலை, புத்திரரால் கவலை, பிறருக்கு உதவுதல், முயற்சி தாமதம். |
| கும்பம் | தனதானிய சேர்க்கை, காரிய சித்தி, போசனசுகம், உடல் நலம். |
| மீனம் | தூரதேசச் செய்தி, நன்கொடை, ஆரோக்கியம், முயற்சிகைகூடும். |

வளவன்

# உலக பொருளாதார வளர்ச்சி 2009 இல் 1-1.5 வீதத்தினால் வீழ்ச்சியடையும்

உலக பொருளாதார வளர்ச்சி 2009ஆம் ஆண்டில் 1-1.5 விதத்தினால் வீழ்ச்சியடையும் எனவும், இது 2008ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட 2.9 வீத வளர்ச்சியின் அரைவாசியாக இருக்கும் எனவும் ஐக்கிய நாடுகள் வர்த்தக மற்றும் அபிவிருத்திக் குழுவின் தலைமைப் பொருளியலாளர் ஹெய்னர் ப்ளாஸ்பெக் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் ஏற்பட்ட எண்ணெய் விலை அதிகரிப்பு மற்றும் பொருட்களின் விலை அதிகரிப்பு என்பவற்றின் காரணமாக ஏற்கனவே உலகளாவிய பொருளாதாரம் தட்டுத்தடுமாறிக் கொண்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மதிப்பிடப்பட்ட அளவையும் விட அதிகமாக பணவீக்கம் அதிகரித்துச் செல்வதானது இன்று பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர், பணவீக்கத்தை எதிர் கொள்ள வட்டி வீதத்தினைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

எண்ணெய்விலை அதிகரிப்பு, பொருட்களின் விலை அதிகரிப்பு என்பவற்றைக் கட்டுப்படுத்த இறுக்கமான பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள ஐக்கிய நாடுகள் வர்த்தக மற்றும் அபிவிருத்திக் குழுவானது அபிவிருத்தியடைந்த நாடுகளும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் மேலும் தமது வளர்ச்சி குறித்துக் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்நாடுகளின் மத்திய வங்கிகள் தமக்கிடையில் பொறுப்புணர்வுடன் கூட்டிணைந்து செயற்பட வேண்டும் எனவும் அந்தக் குழு வேண்டுகோள்விடுத்துள்ளது. (ஓ)

# அமைய அலுவலர்களுக்கு நிரந்தர நியமனம்

வடக்கு மாகாணத்தில் செயற்படும் அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டஅமைப்புகளில் தற்காலிக, அமைய ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையில் கடமை புரிபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான தகவல் விபரங்கள் மாகாண பிரதம செயலாளரினால் திரட்டப்படுகின்றன. 2008ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 180 தினங்கள் சேவையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட வுள்ளன.

குறிப்பிட்ட சேவையில் தகமையுடையவர்களின் விண்ணப்பங்களை உரிய திணைக்களத் தலைவரின் விதப்புரையுடன் அனுப்பிவைக்குமாறு வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலர்வடமாகாணத்தில்செயற்படும் மாகாண சபை நிர்வாகத்திற்கு உட்பட்ட சகல திணைக்களத் தலைவர்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

# 'சிப்தொற' புலமைப்பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி ''சிப்தொற'' புலமைப்பரிசிலுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்கள், யாழ்.பிரதேச செயலர் மரிய தாஸன் ஜேசுவால் அறிவிக்கப்பட்டுள்ளது. விபரங்கள் பின்வருமாறு,

சூ.ஜெறியோன்சன்-சென்பற்றிஸ் கல்லூரி, தே.கிளௌடியா-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சு.கஜேந்திரன்-சென்ஜோன்ஸ் கல்லூரி, ரா.மேரி நிகிந்தா-சென்ஜேம்ஸ் மகளிர் கல்லூரி, கே.ஆஸா பரேக்கா-திருக்குடும்ப கன்னியர்மடம், சி.கபில்ராஜ்-சென்சாள்ஸ் மகா வித்தி.

அ.அனோஜினி-திருக்குடும்ப கன்னியர் மடம், க.ஜெனற்கனீஸி-திருக்குடும்ப கன்னியர் மடம், அ.சுஜித்தா-திருக்குடும்ப கன்னியர் மடம், ச.மொட்சாயினி-சென்சாள்ஸ் மகா வித்தி., கி.தற்பரன்-வைத் தீஸ்வராக் கல்லூரி, நா.ஜெணோசன்-மத்திய கல்லூரி.

அ.கத்தரினா-திருக்குடும்ப கன்னியர் மடம், சி.குயின்ரன் நெலிங்ரா-திருக்குடும்ப கன்னியர் மடம், செ.அலன்பேக்கர்-சென் பற்றிக்ஸ் கல்லூரி, க.ரிசாந்தினி-இந்து மகளிர் கல்லூரி, செ.றேனுகா-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. சி.செந்தூரன்-இந்துக் கல்லூரி, இ.திவ் வியா-இந்துமகளிர் கல்லூரி, ச.சஞ்சீகா- இந்துமகளிர் கல்லூரி. (ஓ)

# இடைநிறுத்தப்பட்ட வேலைகள் சில ஆரம்பிக்கப்பட்டுள்ளன

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சீமெந்துத் தட்டுப்பாடு காரணமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கட்டட வேலைகளில் சில இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை நிர்வாக அலகுக்கட்டடம், மற்றும் குடி தண்ணீர் தாங்கி அமைத்தல் ஆகிய வேலைகளே மீள ஆரம்பிக் கப்பட்டுள்ளது

ஆண், பெண் சிகிச்சை விடுதிகள், சிறுவர் சிகிச்சை விடுதி, வைத்திய அதிகாரி வதிவிடம் ஆகிய வேலைகள் இன்னும் பூர்த்தியாக் கப்படாதது குறிப்பிடத்தக்கது. (ஓ-29)

# சர்வதேச சிறுவர் தின விழா

சமூக நலத்துறை அமைச்சும், வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும், பருத்தித்துறை கல்விக் கோட்டமும் இணைந்து நடாத்தும் சர்வதேச சிறுவர் தின விழா ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி வியாழக் கிழமை காலை 8.30 மணிக்கு பொலிகண்டி கிழக்கு பொது மண்டபத்தில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம் முறை "பிள்ளைகளுக்கு செவி சாய்ப்பதன் மூலம் அவர்களது உலகை மகிழ்ச்சியாக்குவோம்" என்ற தலைப்பினைக் கொண்டு சிறுவர் தினம் நடைபெறவுள்ளது.

இத் தலைப்பினைக்கொண்ட கட்டுரை, பேச்சு மற்றும் கவிதைப் போட்டிகள் பருத்தித் துறை கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இம்மாதம் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிகள் நான்கு பிரிவாக நடைபெறும். ஆரம்பப்பிரிவு தரம் 4, 5. கீழ்ப்பிரிவு தரம் 6,7,8. மத்திய பிரிவு தரம் 9,10,11. மேற்பிரிவு தரம் 12,13 என வகுக்கப்படும். பாடசாலைகளில் போட்டிகளை நடாத்தி ஒவ்வொரு பிரிவிலும் இருவரைப் போட்டிக்கு அனுப்பி வைக்கும்படியும், இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனவும் அறிவிக்கப்படுகின்றது.

சிறுவர்தின விழாவில் இடம்பெறும் கலை நிகழ்ச்சிகள் யாவும் பரு.பிரதேச செயலரால் ஒத்திகை பார்க்கப்பட்ட பின்னரே மேடையேற்றப்படும். ஒத்திகைபார்க்கப்படும் தினம் பின்னர் பருத்தித்துறை சர்வதேச சிறுவர் வாரக் குழுவினரால் அறிவிக்கப்படும்.

இதன்போது போட்டிகளில் பரிசுபெறும் மாணவர்களும் கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் கீழ்வரும் குழுக்களும் பங்குபற்றுமாறு கேட்கப்படுகின்றன.

தனிநடனம்-வட இந்து மகளிர் கல்லூரி, வில்லுப்பாட்டு-கற் கோவளம் மெ.மி.த.பாடசாலை, நாடகம்- "எல்லாம் சரி" பரு.சித்தி விநாயகர் வித்தியாசாலை, குழு இசை-ஹாட்லிக் கல்லூரி, தனி நடனம்-துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலை. (ஓ)

# மூத்தோருக்கான தேவாரப் பண் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேரடி சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மடாலயத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கும் புதன்கிழமை பிற்பகல் 4.30மணிக்கும் மூத்தோருக்கான தேவாரப் பண் இசைப்பயிற்சி நடைபெற்று வருகின்றது.

அகில இலங்கைத் திருமுறை மன்றம், தேரடி சித்தர் செல்லப்பாசுவாமிகள் மடாலய பரிபாலகர்களின் அனுசரணையுடன் தெய்வத் தமிசைச் செல்வர் துறைசேர் திரு முறைத் தோன்றல் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் அவர்கள் மேற்படி வகுப்பை நடாத்தி வருகின்றார். விரும்பியவர்கள் பங்குபற்றி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். (ஓ)

## விடத்தற்பளை நெல்வயல்கள் நெற்செய்கைக்கு அனுமதி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கிழக்கு விடத்தல்பளை நெல் வயல்களில் இவ்வருடம் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள படைத்தரப்பு அனுமதி கிடைத்துள்ளது.

காலபோக நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிவேண்டி தென்மராட்சி பிரதேச செயலாளர் ஊடாக யாழ்.அரச அதிபருக்கு அப்பகுதி விவசாயிகள் விண்ணப்பித்திருந்ததையடுத்து விடத்தல் பளை கமக்கார அமைப்பினர் அப்பகுதி படை உயரதிகாரிகளுடன் நேரில் கலந்துரையாடியதையடுத்தும் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதி கிடைத்துள்ளது. (ஓ-29)

## மணவாளக் கோல சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொழும்புத்துறை வீதி, பாண்டி யன் தாழ்வு ஶ்ரீநரசிம்ம ஞானவைரவர் தேவஸ்தான மணவாளக் கோல சங்காபிஷேகம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 9 மணிக்கு பூர்வாங்க கிரியைகளுடன் வைரவப் பெருமானிற்கு (108) அஸ்டோத்திர சங்காபிஷேகமும், விஷேட பூசை,பஞ்சமுக அர்ச்சனை ஆகியன இடம்பெறும்.

பிற்பகல் 2.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று சுவாமி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (ஓ)




## யாழ்.செய்திகள்

## கைதடி-நீர்வேலி வீதியில் பாலம் அமைப்பு

கைதடி நீர்வேலி இணைப்பு வீதியில் பாலம் அமைக்கும் பணியினை அப்பகுதி பொது அமைப்புகள் மேற்கொண்டுள்ளன.

மழைகாலம் நெருங்குவதால் இப்பணி துரிதமாக மேற்கொள்ளப்படுவதாகவும் இவ் வேலைபூர்த்தியடைந்ததும் பிரதான போக்குவரத்து வீதியாக இது மாறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இப் பாதை மோட்டார் சைக்கிள்த சையிக்கிள் பயனாளிகள் மட்டுமே பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது. (ஓ-29)

# குளப் புனரமைப்பு வேலைகளால் பொதுமக்கள் பெரும் அவஸ்தை

(சாவகச்சேரி)

சங்கரத்தை குளம் புனரமைப்பு செய்யும் நோக்கோடு குளம் ஆழமாக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றது. ஆழமாக்கும்போது எடுக்கப்படுகின்ற மண் சங்கரத்தை நவாலி வீதி வழியால் உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றது.

அவ்வாறு ஏற்றிச் செல்லப்படும் மண் உழவு இயந்திர பெட்டியின் பின்புற கதவுகள் பூட்டப்படாமையினால் வீதிகளில் கற்கள், மண் என்பன கொட்டப்படுகின்றன.

இவ்வாறு வீதியில் கொட்டப்படுகின்ற கல் மண் என்பனவற்றினால் வீதியால் பயணிக்கின்ற பாடசாலை மாணவர்க்ள், முதியவர்கள் என பலரும் பல்வேறு அசௌ கரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக வீதியால் செல்கின்ற வாகனங்கள் காற்றுப்போய் பிர யாணிகள் நீண்டதூரம் உருட்டி செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இன்னும் சில வாரங்களில் பருவ மழை பெய்ய வுள்ளதால் மேலும் பல வீதி விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளது. எனவே இக்குளப் புனரமைப்பு வேலைகளுக்கு பொறுப்பான அதிகாரிகள் பொதுமக்கள் பாதிக்காத வகையில், குளம் புனரமைப்பின் போது அகழப் படுகின்ற மண்ணினை வீதியால் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஓ-27)

## சந்நிதியான் ஆச்சிரம ஆன்மீக நிகழ்வு

(பருத்தித்துறை)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் நாடத்தப்படும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று புதன்கிழமை காலை 10 மணியளவில் "அறம் செய்" என்ற பொருளில் இளைப்பாறிய ஆசிரியர் ஐ.சண்முகலிங்கம் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ)

## மாமணி கலச கும்பாபிஷேகம்

(அல்வாய்)

அல்வாய் முத்துமாரி தேவஸ்தான மாமணி கலச கும்பாபிஷேகம் நாளை வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6மணி பூஜையைத் தொடர்ந்து கும்பாபி ஷேகக் கிரியைகள் நடைபெற்று 8.30 மணி தொடக்கம் காலை 9 மணிக்கு இடைப்பட்ட சுப வேளையில் மணி ஒலி எழுப்பப்படவுள்ளது. இந்நிகழ்வு ஓய்வுபெற்ற அதிபர் கி.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசிரியுரையை ஶ்ரீலஶ்ரீ சோம சுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சுவாமி சித்ரூபானந்தா ஆகியோரும் வாழ்த்துரையை பேராசிரியர் அ.சண்முகதாஸும், நூல் வெளியீட்டையும் மதிப்பீட்டுரையையும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் வழங்கவுள்ளனர். (ஓ)

## ஏகாதசி விரத பூசை

கோண்டாவில் கிழக்கு ஶ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் நாளை வியாழக்கிழமை ஏகாதசி விரத பூசை 3.30 மணிக்கு சங்கல்ப்பத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

வசந்தமண்டபபூசையை அடுத்து ஶ்ரீதேவி பூதேவி சமேதராய் ஶ்ரீமன் நாராயணன் உள்வீதி வலம் வரும் திருக்கோலக் காட்சி இடம்பெறும். (ஓ-36)

## தென்மராட்சி விவசாயிகள் நெற்செய்கைக்கு அனுமதி மறுப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ வடக்கு பிரதேசங்களில் இவ் வருட கால போக நெற்செய்கைக்கு விண்ணப்பித்தவர் களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள் ளது.

ரயில் பாதைக்கு தெற்கே கடந்த 2004, 2005ஆம் ஆண்டுகளில் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தது.

பிர தேச செயலர் ஊடாக அரச அதிபருக்கு விண் ணப்பம் அனுப்பியபோதும் ரயில் பாதையின் வடக்குப் பகுதிக்கு அனுமதி கிடைத்துள்ளபோதும் தெற்குப் பகுதிக்கு அனுமதி கிடைக்கவில்லை கால போக நெற் செய்கைக்கு ஆயத்தம் செய்த விவசாயிகள் இதனால் ஏமாற்றம் அடைந் துள்ளன. (ஓ-29)

## சங்காபிஷேகம்

துணைவி, சிவனின் கூடல் அருள்மிளிரும் ஞானவைரவ சுவாமி கோவில் கும்பாபிஷேகதின சங்காபிஷேகம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி பகல் 11மணிக்கு 108 கலச சங்காபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மூலவர் பூஜையுடன் வசந்த மண்டப பூசை நடைபெற்று சுவாமி வீதிவலம் வருவார். (ஓ)







சங்கானை மேற்கு சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவின் போது வலி.தென்மேற்கு பிரதேசசபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் நிலைய புதிய கட்டடத்தை திறந்து வைப்பதை முதலாவது படத்திலும், மாணவிகளின் நடனத்தினைப் பார்வையிடும் விருந்தினர்களை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்ட மக்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# நோத்முதல் கோபல்லவா வரை 94



### ஆள்பதி மக்கலம் காலத்துத் திருத்தம்

பொதுசன இயக்கத்தின் வரலாறும் ஆற்றின் போக்கைப் போன்ற தேயாகும். சிறு துளிகள் ஒன்றாகிச் சிற்றாறாகி அவை ஒன்றாகக் கலந்து பேராறாகப் பாய்வதைப் போலவே மக்கள் இயக்கமும், கோகலே அவர்கள் 1915 ஆம் ஆண்டில் ஆற்றின் ஊற்றுப்போலவும் மகாத்மாகாந்தியடிகள் 1945 ஆம் ஆண்டில் ஆற்றின் பிரவாகம் போலும் இந்திய நாட்டின் தேசிய வரலாற்றில் இருந்தார்கள் என்பர். கோகலே அவர்கள் இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டும் என்றும், அதனைப் பெற இந்தியருக்குத் தகுதி உண்டென்றும் ஆங்கிலேயருக்கு அறிவுச் செய்தார். அதிலிருந்து இந்திய வரலாற்றிலே புதிய சகாப்தமும் அதன் போக்கிலே புதிய திருப்பமும் ஏற்படலாயின. வெள்ளைப் பறங்கியைத் துரையென்ற காலமும் போச்சே என்றும், நாமிருக்கும் நாடு நம தென்பதறிந்தோம் என்றும் பாரதி யார் பாடிய காலமும் அஃதே.

இந்தியாவில் அரசியற் கட்சிகள் அரும்புவதற்கு முன்பொது நலத் தொண்டு செய்யும் நோக்கமாகத் தோன்றிய சங்கங்களும் சபைகளும் இருந்தன. பிரிட்டிஸ் இந்திய சங்கம், தென்னைச் சுதேசிச் சங்கம், ஸர்வ ஜனிகசபா முதலிய சங்கங்கள் வங்காளம், பம்பாய், சென்னை,பூனா முதலிய இடங்களில் தொண்டு செய்து வந்தன.

சென்னையில் இந்து,வங்கத்தில் அமிர்த பசார் பத்திரிகா, பம்பாயில் பம்பாய் சமாசார் போன்ற பத்திரிகைகள் பொது மக்களுக்கு அரசியல் நுணுக்கங்களை அவ்வப்போது அறிவித்து வந்த பின்னரே இந்தியப் பொது மக்கள் அரசியற்தேவை களை உணரந் தார் கள். பத்திரிகை படிக்கும் பழக்கம் இந்தியாவிலே அதிகம் பரந்தமை யால் 1875 ஆம்

**மீள் பார்வை**

ஆண்டளவில் எல்லாமாக 478 பத்திரிகைகள் இருந்தன என்பர். பத் திரிகைகளின் சுதந்திரத்தைக் குறைக்கு மாறு இங்கிலாந்திலிருந்து லிட்டன் பிரபு கட்டளையிட்டதும் உண்டு.

இந்திய மாதும் அபிமானங் கொண்ட ஆங்கிலேயர் பலர், அவர்களுள் எனிஸ்பிரட்டன் பாரும் அனிபெசன் அம்மை யாரும் தலை சிறந்தவர்கள். அம்மையார் இங்கிலாந்து, இந்தியா, அப்கானிஸ்தான் என்னும் தமது நூலில் ஆங்கிலேய அரசாங்கம் இந்தியாவில் செய்துவந்த அலங்கோலங்களைச் சித்திரித்து அம்பலப்படுத்தினார். வங்காளப் பகுதிகளில் எழுந்த இலக்கிய வளமும் கவிப்பிரவாகமும் நாட்டுப் பற்றை வளர்த்தன. பக்கிம் சந்திர் போன்ற கவிகள் அவ்வளப்பத்தை அரண் செய்தார்கள்.

அருணாசலம் அவர்கள் இலங்கைச் சிவில் சேவிஸ் பரீட்சைக்குப் போய் வந்தமை போல இந்திய சிவில் சேவைப் பரீட் சைக்குப் போய் வந்த ரமேஸ்சந்திரதத் என்ற பெரியாரும் அவருக்குப் பின்வந்த சுரேந்திரநாத் பானர்ஜி அவர்களைப் போன்ற பெரியார்களும் வங்காளத்திலே தேசிய உணர்ச்சியை உண்டாக்கினார்கள்.

சுரேந்திரநாத் பானர்ஜி முதலானோர் 1876 இல் உண்டாக்கிய இந்திய சங்கம் அரசியல் திருத்தங்கோரிக் கிளர்ச்சி செய்வதாயிற்று. சுரேந்திநாத் ஆறுமுகநாவலரைப் போன்ற நாவன்மை படைத்த பெரியார். அவர் பேச்சு இளைஞர்களுடைய நெஞ்சைத் தொட்டு விட்டதில் ஆச்சரி யமில்லை. ஒன்றுபட்ட சுதந்திர இந்தியா உதயமாகும் நாளை எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர். பக்கிம் சந்திரர் எழுதிய ஆனந்த மடத்தில் அன்னை வழிபாடும் வந்தே மாதர கீதமும் தேசபக்தியை வளர்த்தன. சென்னையில் சுப்பிரமணிய ஐயர் ஆரம்பித்த மகாசன சபையும், பம்பாய் வாசிகள் உண்டாக்கிய ஈராசதானிக் கழகமும் தேசத்தொண்டு செய்துவந்தன. இந்தக் காலத்திலே தான் 1884 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் சென்னையிலே மயிலாப்பூரிலே உள்ள ரகுநாதராவின் மாளிகையில் பல மாகாணங்களைச் சேர்ந்த 17 தேசபக்தர்கள் கூடினார்கள்.

அந்தப் பதினேழு பேரும் செய்த முயற்சியின் பயனாகவே இந்திய காங்கிரஸ் 1885 ஆம் ஆண்டில் முதன் முதலாகப் பம்பாயிலே கூடியது. அதில் பல மாகாணப் பெரியார்களும் வந்திருந்தனர். வங்காளத்து றோமேஸ் சந்திரபானர்ஜி மகாநாட்டுக்குத் தலைவராயிருந்தார். இலங்கையில் யோசப் வால் என்ற பெரியாரைப் போல இந்தியா விலும் ஆங்கிலப் பெரியார்கள் இருந்தார் கள். அவர்களுள் A.O ஹியூம் என்பார் குறிப்பிடப்ப வேண்டியவராவர்.

**க.சி.குலரத்தினம்**

இங்ஙனம் அமைந்த காங்கிரஸ் காலந் தோறும் வெவ்வேறு நகரங்களிற் கூடி இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டு வரலாயிற்று. தாதாபாய் நவுரோஜி, மதனமோகன மாளவியா, மகரிஷி தேவேந் திர நாத்தாகூர், பால கங்காதர திலகர், கோபால கிருஷ்ண கோகலே, லாலா லஜபதிராய், அன்சாரி முதலாய பெரியோர்கள் இருந்தார்கள்.

(தொடரும்)

# அந்த இரவு விடியவே இல்லை!

அந்த வெள்ளிக்கிழமை விடியலை உச்சாகமாக எதிர்கொண்டார் நளினி. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதியாக இருக்கும் நளினிக்கு ,வேலூர் பெண்கள் சிறையே பளிச்சென தெரிந்தது. சிறையில் இருந்து விடுதலை செய்யக்கோரி நளினி தாக்கல் செய்த மனு மீது அன்று தான் விசாரணை. தமிழக அரசு தனக்கு சாதகமான முடிவை நிச்சயம் அறிவிக்கும் என்று எதிர்பார்த்தார் நளினி!

சகோதரர் பாக்கியநாதனின் 2 வயது மகளை வேலூர் சிறைக்கு அழைத்து வரச் சொல்லியிருந்தார். குட்டி மருமகளின் மழலைக் குழவையை அதிகமாகவே ரசித்தார். ''அரித்திராவைத்தான் ( நளினியின் மகள்) பார்த்து இரண்டரை வருஷமாச்சு. ஆனால் சீக்கிரமே அவ கூடவே இருக்கிறமாதிரி தீர்ப்பு வந்திரும் '' என்றவரின் கண்களில் ஒளி!



ஆனால் அந்த ஒளி மதியத்திற்கு மேல் கண்ணீர் துளியாக மாறிப்போனது தான் சோகம். நளினி தாக்கல் செய்த மனுவுக்கு பதிலளித்த தமிழக அரசு "நளினியை விடுதலை செய்ய முடியாது" என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டது. இருண்ட முகத்துடன் மீண்டும் சிறையில் தனது தனி அறைக்குள் முடங்கிக்கொண்டார் நளினி.

26 வயதில் சிறை சென்ற நளினிக்கு இப்போது வயது 43 . தனிமைக்கு தன் இளமையை காவுகொடுத்துவிட்டவர். நடுத்தரவயதையேனும் தன் செல்ல மகளுக்காக செலவிட விரும்பினார். ஆனால் மீண்டும் சிறைக் கம்பிகளை வெறித்தபடி நாட்களை கழிக்கத் தான் அவருக்கு கொடுத்து வைத்திருக்கிறது. இன்னும் 20ஆண்டுகள்கூட நளினியை சிறையில் வைத்திருங்கள் ஆனால் அதன் பிறகாவது விடுவிப்பீர்களா என்பதை தெளிவாக கூறுங்கள்! என்பது தான் அவரது இரத்த சொந்தங்களின் கண்ணீர் கதறல்!

13.06.1991, நள்ளிரவு 11 மணி . சென்னை சைலாப்பேட்டையில் வந்து நின்ற விழுப்புரம் பேரூந்திலிருந்து அமைதி யாக இறங்கினார்கள் அந்த ஆணும் பெண்ணும். சென்னை "ஸ்டேஷன் 95" இல் இருந்து தமிழீழம் "ஸ்டேஷன் 910" வயர்லஸ் செய்தியில் , "ஆபீஸர் பெண் மணி''என்று அழைக்கப்படும் நளினியும் "இந்து மாஸ்டர் என்றழைக்கப்படும் முருக னும் தான் அந்த ஜோடி. காத்திருந்து கைது செய்தது சிறப்பு புலனாய்வு காவல்துறை. மறுநாள் அவர்களை நீதி மன்றத்தில் நிறுத்திய போது , நளினி உயிருக்காக போராடிக்கொண்டிருந்தார். தன் உயிருக்கு அல்ல, தன் வயிற்றில் வளரும் உயிருக்காக.

காலங்கள் கடந்த நிலையில், இப்போது லண்டனில் வாழும் நளினியின் மகள் அரித்திரா (மேகரா) வுக்கு வயது 16.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 41பேரில் நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய நால்வருக்கும் மட்டுமே தூக்கு தண்டனை உறுதிப்படுத்தப் பட்டது. ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பி காத்திருந்தார்கள். "அவர்களை மன்னித்து, துக்குத் தண் டனையை நிறுத்தி வையுங்கள்" என்று முன்னாள் ஜனாதிபதி கே.ஆர்.நாராயணனுக்கு சோனியாகாந்தியே கடிதம் அனுப்பினார். ஆனாலும் இதுவரை நளினியின் தூக்கு மட்டும் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டு இருக்கிறது.

ஆயுள் தண்டனை என்றால் 14 வருஷங்கள் தானே 2004இல் தன்னை விடுதலை செய்து விடுவார்கள் என்ற நளினியின் காத்திருத்தலுக்கு பலனில்லை.

விடுதலைப்புலிகளின் வயர்லஸ் தகவலில் "ஆபீஸர் பெண்மணி" என்று நளினி அழைக்கப்படக்காரணம் அவர் அப்போது அடையார் அனபாண்டு சிலிகான் பிறை வேற் லிமிற்றட் கம்பனியில் வேலை பார்த்தவர் என்பது தான். நளினியின் குடும்பம் சென்னை மயிலாப்பூர் பகுதியில் வசித்துவந்தது. சங்கர நாராயணன் பத்மா தம்பதியினரின் 3 வாரிசுகளில் மூத்தவர் நளினி. புலிகள் அமைப்பு தமிழகத்தில் சுதந் திரமாக உலா வந்தபோது அந்த அமைப் பினரை தங்க வைத்து ஆதரித்த எத் தனையோ குடும்பங்களில் நளினியுடைய தும் ஒன்று. அந்த சமயம் இந்த வீட்டுக்குள் ஐக்கியமானவர் முருகன். புலிகள் அமைப்பின் கடும் கட்டுப்பாடுகளையும் மீறி முருகனுக்கு நளினிமீது ஏற்பட்ட எதிர்ப்பு காதலாக மாறியது. அந்த சமயம் தான் நளினியின் வீட்டில் தங்க வந்தனர் சுபா , தணு ஆகியோர்.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவ தற்கு 14 நாட்களுக்கு முன் புலிகளின் வயர்லஸில் "இந்து மாஸ்டர் வீட்டில் அவள் தான் மூத்த பெண். நெருக்கமாக பழகி வருகிறேன். நம்மைத்தவிர வேறு யாருக்கும் நமது நோக்கம் தெரியாது. ஆட்சியைப் பிடிக்கப்போகும் கட்சியின் ஆதரவை பெறுவதற்காகத்தான் இது என்று அவளிடம் சொல்லியிருக்கிறேன்'' என்று தகவல் பரிமாறப்பட்டதாக சொல்லுகிறது சி.பி.ஐ. பிரியங்கா காந்தி வேலூர் சிறைக்கு வந்து தன்னை சந்தித்த போது இந்த கதையைச் சொல்லித்தான் அழுதிருக்கிறார் நளினி. ''உங்கள் அம்மா எங்களை மன்னித்து கருணை காட்ட வேண்டும் என்று எழுதிய கடிதம் தான் இத்தனை ஆண்டுகளில் ஆறுதல் அளித்த ஒரே விஷயம்" என்று அப்போது பிரியங்காவிடம் மனம் விட்டு பேசியிருக்கிறார் நளினி.

"நான் ஏமாற்றப்பட்டவள்" நளினி அடிக்கடி உதிர்க்கும் வாசகம் இது. ஆனால் அதையே நினைத்து சோர்ந்து போகாமல் சிறைத் தருணங்களை சிறப்பாகவே கழித்திருக்கிறார் நளினி,

**ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று வேலூர் சிறையில் இருக்கும் நளினி தொடர்பாக ஆனந்தவிகடன் வெளியிட்டுள்ள கட்டுரை**

சாதாரண அலுவலக கிளாக்காக சிறை சென்ற நளினி இப்போது எம்.ஏ. மற்றும் எம்.சி.ஏ பட்டதாரி. பேஷன், டெய்லரிங், ஹோம்சயின்ஸ், கிராப்ட் , முதலுதவி, யோகா போன்ற பாடங்களில் டிப்ளோமா பட்டங்களையும் பெற் றிருக்கிறார். பொழுது போக்குக்காக இந்த படிப்புகளை நான் படிக்கவில்லை. விடுதலையான பிறகு யார் தயவையும் எதிர்பார்க்காமல் நானே என் மகளை காப்பாத்தணும். அதற்குத்தான் இத்தனை தொழிலை கத்துக்கிட்டேன். இதில் நிச்சயம் ஏதோ ஒன்னு என்னைக்காப்பத்தும் என்பது தற்போது நளினியின் நம்பிக்கை. பொதுவாக பெண் கைதிகள் சிறைவா ளாகத்தில் ஏதேனும் வேலைகள் பார்ப்பார் கள். ஆனால் அதில் நளினிக்கு ஆர்வம் இல்லை. எப்போதும் மற்றவர்களிடமிருந்து தனித்தே இருக்கிறார். படித்து முடித்த பாடங்களை மீண்டும் மீண்டும் படித்துக்கொண்டே இருக்கிறாராம். காலையில் திறந்த வெளிகளில் உலவவிட்டு மாலையில் அறையில் அடைக்கும் நடைமுறை தான் நளினிக்கும். ஆனால் தனியறை.

நளினியும் முருகனும் சிறை விதிகளின் படி 15 நாட்களுக்கு ஒரு முறை வளாகத்திற்குள் சந்திக்கிறார்கள். காவலர்களின் கண்காணிப்பில் தான் உரையாட வேண்டும் என்றாலும் அதுவே பெரிய ஆறுதல்.

நளினி செங்கல்ப்பட்டு சிறையில் இருந்த போது பிறந்தவள் அரித்திரா இரண்டு மாத கருவாக சிறைக்குள் வந்த அரித்திரா 2 வயது வரை நளினியுடன் சிறையிலேயே இருந்தாள். பிறகு முருகனின் அம்மா தன் பேர்த்தியை இலங்கைக்கு அழைத்துச் சென்று விட்டார். 6வயது வரை அங்கிருந்த அரித்திராவை முருகனின் சகோதரர்கள் லண்டனுக்கு அழைத்துச் சென்று விட்டனர். இலங்கையில் இருக்கும் போது ஆண்டுக்கு ஒரு முறை அப்பா அம்மாவைப்பார்க்க வேலூர் சிறைக்கு வருவது அரித்திராவின் வழக்கம். கடைசியாக இரண்டரை வருடத்திற்கு முன் அம்மாவை சந்தித்திருக் கிறாள். "அம்மா சீக்கிரமே வந்திடுவேன். நாம இனிமே சேர்ந்தே இருப்போம்" என்று நளினி சொல்ல " நீ லண்டனுக்கு வந்திடும்மா அங்கே பத்திரமா நான் உன்னை பார்த்துக்கி றேன்"என்று அழைத்திருக்கிறாள் அரித்திரா.

ஆனால் அரித்திரா நினைத்தது போல் நளினி விடுதலையாகவில்லை. நளினி எதிர் பார்த்து காத்திருக்க அரித்திரா வேலூருக்கு வரவில்லை. காரணம் அரித்திராவிற்கு கடந்த 2 ஆண்டுகளாக இந்திய அனுமதிக்கு விசா கிடைக்கவில்லை.

அரித்திராவின் அப்பா முருகன் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் என்று சொல்லி விசா மறுக்கிறார்கள் ஆனால் முருகனின் அப்பா அம்மா சகோதரிகளுக்கு விசா தருபவர்கள் மகளுக்கு மட்டும் ஏன் மறுக்க வேண்டும் என்பது உறவினர்களின் கவலை. மகளைப் பார்க்க முடியாத கவலையில் தனது அம்மா பத்மாவை மாதம் ஒரு முறையாவது தன்னை பார்க்க வரச்சொல்லியிருக்கிறார் நளினி.

65 வயதான பத்மா சென்னையில் மகன் பாக்கிய நாதனுடன் இருக்கிறார் அப்பா சங்கர நாராயணன் திருநெல்வேலியில் வாழ்கிறார். ஓய்வு பெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் இவர். நளினியின் நெருங் கிய உறவினர்களின் பட்டியலை பொலிஸ் வாங்கி வைத்துள்ளது. அவர்களைத் தவிர மற்றவர்கள் யாரும் நளினியைப்பார்க்க அனுமதிப்பதில்லை.

மே 26ஆம் திகதியும் ஜனவரி 21ஆம் திகதியும் குடும்பத்தினர் நளினியை சந்திப் பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். முன்னது நளினியின் பிறந்த நாள். அடுத் தது மகள் அரித்திராவின் பிறந்த நாள். இந்த இரண்டு நாட்களிலும் தான் சந்தோஷமாக இருப்பாராம் நளினி. இந்த 17 வருடங்களில் நளினிவெளியே வந்தது ஒரே ஒரு முறை தான் (நளினி பிரியங்கா சந்திப்பு நிகழ்ந்தது சிறைக்கு வெளியே ஓர் இடத்தில் என்கிறார் சுப்பிரமணி சாமி) சகோதரர் பாக்கிய நாதனின் திருமணம் சென்னையில் நடந்தது. கல்யாண மண்டபத்தில் 3 மணி நேரம் மட்டும் இருக்கலாம் என்ற அனுமதியுடன் வந்தார் நளினி. அன்று தான் நெருங்கிய உறவினர்கள் அனைவரையும் பார்த்தார். அந்த சந்தோஷத்தின் தொடர்ச்சியாக அன்றைய திருமண ஆல்பத்தை சிறையில் வைத்திருக்கிறார்.

குடும்பம் என்னோடு இருப்பது போல் இருக்கிறது என்பாராம் ஆல்பத்தை பார்க்கும் போதெல்லாம். நெல்லையில் அப்பா சென்னையில் அம்மா சகோதரன், சகோதரி கணவன் அடுத்த சிறையில். மகள் லண்டனில் மாமனார் மாமியார் இலங்கையில் என நளினியின் குடும்பம் கலைந்து உருக்குலைந்து கிடக்கிறது.

நளினிக்கு மட்டும் அந்த இரவு இன்னும் விடியவே இல்லை.

# பிலிப்பைன்சில் நிலச்சரிவு 30 பேர் உயிரிழப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸின் தெற்குப்பகுதியில் உள்ள மலைக் கிராமத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் 30பேர் உயிரிழந்தனர். இது குறித்து அந்நாட்டு அதிகாரிகள் திங்கட்கிழமை தொடர்ந்து பெய்த கனமழையால் மலைப்பகுதி கிராமமான மசாராவில் கடந்த 2 நாட்களாக நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் பாறைகளும், மரங்களும் விழுந்து 20க்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலுமாக சேதமடைந்தன. இதுவரை 11 பேரது உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் 19பேர் இடிபாடுகளுக்குள் சிக்கி இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. படுகாயமடைந்த 17பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து மழை பெய்வதால் மீட்புப் பணி பாதிக்கப்பட்டுள்ளது. இராணுவ ஹெலிகொப்டர்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அப்பகுதியில் அவசர நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது. அந்த கிராமத்தில் வசித்து வந்த சுமார் 5ஆயிரம் பேர் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஓ)

# ஆப்கானிஸ்தானில் 63அடி உயர புத்தர் சிலை கண்டு எடுக்கப்பட்டது

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் மத்திய பகுதியில் இருந்த பிரமாண்டமான புத்தர் சிலைகள் 7 ஆண்டுகளுக்கு முன்பு தலிபான் தீவிரவாதிகளால் சேதப்படுத்தப்பட்டது. அந்த சிலைகளின் சேதாரங்களுக்கு அருகில் 63 அடி உயர புத்தர் சிலையை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு எடுத்தனர்.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ராட்சத தூங்கும் புத்தர் சிலையை தேடியபோதுதான் இது கிடைத்தது. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு சீன யாத்திரிகர் ஒருவர் பார்த்துவிட்டு எழுதி இருக்கிறார்.

இந்த சிலையுடன் நாணயங்கள், பீங்கான் பாத்திரங்கள் என மொத்தம் 89 பழம் பொருட்கள் கண்டு எடுக்கப்பட்டன. (ஓ)

# ஜோர்ஜிய விவகாரம் சம்பந்தமாக இணக்கம் ஏற்பட்டுள்ளது

## ரஷ்யா-பிரஞ்சு அதிபர்கள் அறிவிப்பு

மாஸ்கோவில் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் ஜோர்ஜிய விவகாரத்துக்கு தீர்வு காண்பதற்கான நடைமுறைகளை ரஷ்ய மற்றும் பிரஞ்சு அதிபர்கள் அறிவித்தனர்.

சுமார் 200 ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர் ஒரு மாதத்துக்குள் தெற்கு அசட்டியாவுக்கு செல்வார்கள் என்று தாம் உடன்பாடு கண்டுள்ளதாக அதிபர் நிக்கோலா சர்கோஸியும், டிமித்ரி மெத்விய தேவ்வும் கூறினார்கள்.

சர்ச்சைக்குரிய தெற்கு அசட்டியா மற்றும் அப்காசியாவுக்கு வெளியே உள்ள அனைத்து ரஷ்ய துருப்புக்களும் ஒருமாத காலத்துக்குள் அங்கிருந்து வெளியேறும் என்று அதிபர் சர்கோசி தெரிவித்தார்.

ஜோர்ஜியாவின் முக்கிய போட்டி துறைமுகத்துக்கு வெளியே உள்ள ரஷ்ய சோதனைச் சாவடி ஒருவார காலத்துக்குள் அகற்றப்படும்.

பிரான்ஸ் அனுசரணையுடன்ான சமாதான உடன்படிக்கையை ரஷ்யா முறையாக மதித்து நடப்பதாகவும் ஆனால், ஜோர்ஜியா அதனைச் செய்யவில்லை என்றும் மெட்வடேவ் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்.

ஜோர்ஜியா தனது இராணுவ வலிமையை அங்கு மீண்டும் நிலைநிறுத்த விளைவதாகவும், அமெரிக்கா அதற்கு உதவுவதாகவும் அவர் கூறினார். (ஓ)

# மத்திய கட்டளைத் தளபதியாக டேவிட் பெட்ரேயஸ் பணியாற்றவுள்ளார்



ஈராக்கிற்கான அமெரிக்க இராணுவ கட்ட ளைத் தளபதி ஜெனரல் டேவிட் பெட்ரேயஸ் எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தனது கடமைப் பொறுப்பை இராணுவ அதிகாரி ரேமொன்ட் ஒடியர்னோவிடம் கையளிக்கவுள்ளதாக இராணுவ பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஈராக்கிய கட்டளைத் தளபதியாக பணியாற்றிய 19மாதங்களில் அங்கு நிலை கொண்டிருந்த சுமார் 1 இலட்சத்து 46ஆயிரம் அமெரிக்க படையினரை வழிநடத்தும் பொறுப்பை டேவிட் பெட்ரேயஸ் வகித்தார்.

கென்யா முதல் கஸகஸ்தான் வரை நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினருக்கான மத்திய கட்டளைத் தளபதியாக டேவிட் பெட்ரேயஸ் பணியாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# தனது கதை முடிந்தது என எண்ணியவர் தப்பிப் பிழைத்தார்

(லண்டன்)

தரையிலிருந்து 4500அடி உயரத்தில் அவ்விமானத்தின் வால் பகுதியில் அடிபட்டு சுயநினைவிழந்த வான் சாகச நிபுணர் ஒருவர் இலேசான சிராய்ப்பு காயங்களுடன் உயிர் தப்பிய அதிசய சம்பவம் பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ளது.



பறந்த விமானத்திலிருந்து குதித்த வேளை

ஜமி றொபேர்ட்ஸன் என்ற இந்த 57வயது வான் சாகச நிபுணர் மயங்கிய நிலையில் நிலத்தை அண்மித்த வேளை, அவரது பரசூட் அபூர்வமான முறையில் தானாகவே விரிந்தமை காரணமாகவே அவர் உயிர் தப்பியுள்ளதாக கூறப்படுகிறது.

மருத்துவமனையில் சுய நினைவுக்கு திரும்பிய ஜமி றொபேர்ட்ஸனுக்கு, தான் உயிருடன் இருப்பதைப் பார்த்து பெரும் வியப்பு. விமானத்தின் வால் பகுதியில் அடிபட்டு வீசப்பட்ட சமயம் தன்னுடைய கதை அத்துடன் முடிந்தது என்ற உணர்வே தனக்கு ஏற்பட்டதாக அவர் கூறினார். (ஓ)

# பாக்.ஜனாதிபதி சர்தாரி மறுமணம்?

(கராச்சி)

பெனாசிர் பூட்டோவின் கணவர் சர்தாரி அடுத்த நான்கு மாதத்தில் மறுமணம் செய்து கொள்வார் என்று கூறப்படுகிறது. பெனாசிர் பூட்டோ படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவரானார் அவரது கணவர் ஆசிப் அலி சர்தாரி. அதிபர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றார்.

அதிபர் தேர்தலில் சர்தாரி வெற்றி பெறுவார் என்று கணித்துக்கூறிய பல்வேறு ஜோதிடர்களும் நான்கு மாதத்தில் அவர் மறுமணம் செய்துகொள்வார் என்று தெரிவித்துள்ளனர். அதிபர் தேர்தலில் சர்தாரி வெற்றிபெற்ற தினம், நல்ல நாள் அல்ல. இதனால் அவருக்கும் நாட்டுக்கும் பிரச்சினை ஏற்படும் என்றும் ஜோதிடர்கள் கூறியுள்ளனர். இதே போல, சர்தாரி மறு மணம் செய்துகொண்டாலும் அது நீடித்த மணவாழ்க்கையாக அமையாது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் பிரபல ஜோதிடர் ஹூமாயுன் அப்சல் பட்கூறியதாவது சர்தாரி பிறந்த தினம் ஜுலை 26 என்பதால் அவர் ஆளுமை நிறைந்தவராக இருப்பார்.



இது போன்றவர்கள் தொலைநோக்கு பார்வை கொண்டவர்கள் எதையும் தீர்க்கமாக சிந்தித்து தான் முடிவெடுப்பார்கள். இவர்கள் தலைமை வகித்து செல்லவே விரும்புவார்களே தவிர பிறரது தலைமையின் கீழ் செல்லமாட்டார்கள்.

பாகிஸ்தானின் பொருளதாரம் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் சீர்பட துவங்கும். சர்தாரியின் ஆட்சிக் காலத்தில் நாட்டுக்கு மட்டுமின்றி அவருக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இன்னொரு திருமணம் செயது கொண்டாலும் அது நீடித்து இருக்காது இவ்வாறு அப்சல் பட் கூறியுள்ளார் (ஓ)

# அநாதைகளுக்கு நிதி திரட்டுவதற்காக 1600 கி.மீ தூரம் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் பிரிட்டன் இளவரசர்கள்

(லண்டன்)

அனாதைகள் மற்றும் எயட்ஸ் பாதிததவர்களுக்கு நிதி திரட்டுவதற்காக 1,600 கி.மீ. தூரத்திற்கு மோட்டார் சைக்கிள் பயணம் மேற்



கொள்ள பிரிட்டன் இளவரசர்கள் வில்லியமும், ஹரியும் திட்டமிட்டுள்ளனர்.

தென்னாபிரிக்கா மற்றும் லெசோதோ வழியாக கொளுத்தும் 40டிகிரி சென்டி கிரேட் வெயிலில் அவர்கள் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர். கரடு முரடான பாதைகள், வழிப்பறிக் கொள்ளையர்கள் மற்றும் கொடிய விஷப் பாம்புகள் நிறைந்த சாலைகள் வழியாக அவர்கள் மோட்டார் சைக்கிளில் செல்கின்றனர்.

ஒருவார காலத்திறகு மேலாக அவர்கள் மேற்கொள்ளும் இந்தப் பயணத்தின் போது ஆபிரிக்காவின் தொலை தூரப் பகுதிகளில் உள்ள மக்களை சந்திக்க உள்ளதோடு அபாயகரமான பல பகுதிகளிலும் பயணிக்க உள்ளனர்.

இளவரசர்களின் இந்தச் சாதனைப் பயணத்தின் போது அவர்களின் காதலிகளான கதேமில்ட்னோ மற்றும் செல்சி டேவியோ உடன் செல்லவில்லை. மோட்டார் சைக்கிள் பயணத்தின் முடிவில்தான் அவர்கள் தங்கள் காதலர்களைச் சந்தித்து பாராட்டுத் தெரிவிக்கின்றனர். இந்தத் தகவலை இளவர சர்களின் நண்பர்கள் கூறியதாக "டெலி கிராப்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஓ-5)

## உலக தரிசனம்

# அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்களில் முதலிடம் வகிக்கும் ஜோன் மக்கெயின்

(நியூயோர்க்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனநாயக கட்சி வேட்பாளர் பராக் ஒபாமாவை விட குடியரசு கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ஜோன் மக்கெயின் முன்னணியிலிருப்பதாக பிந்திய இரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன.

மக்கெயினின் அனுபவ பலம், உப ஜனாதிபதி வேட்பாளராக சாரா பாலினது தெரிவு என்பன அவருக்கு பலம் சேர்ப்பதாக உள்ளதாக கூறப்படுகிறது.

"யு.எஸ்.ஏ.டுடே" ஆல் கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமைவரை பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களிடையே நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் 4 சதவீதம் அதிகமான வாக்குகளைப் பெற்று பராக் ஒபாமாவை விட ஜோன் மக்கெயின் முன்னணியிலுள்ளார்.

இந்த வாக்கெடுப்பில் மக்கெ யின் 50 சத வீத வாக்குகளையும் ஒபாமா 46சத வீத வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

அதேசயம் காலுப் டெயிலியால் நடத்தப்பட்ட பிறிதொரு கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பில் ஜோன் மக்கெயின் 48 சதவீத வாக்குகளைப்பெற்று, 45 சதவீத வாக்குளைப் பெற்ற ஒபாமாவை விட முன்னணியிலுள்ளார். (ஓ-5)

# அவுஸ்திரேலியா இந்தியாவுக்கு யுரேனியம் வழங்க மறுப்பு

(சிட்னி)

இந்தியாவுக்கு யுரேனியம் தரமாட்டோம் என்று அவுஸ்திரேலியா கூறியுள்ளது. இந்தியா அணு உலைகளுக்கு தேவையான யுரேனியத்தை பெறுவதற்காக அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

ஆனால் யுரோனியம் சப்ளை செய்யும் நாடுகள் சில யுரேனியத்தை இந்தியாவுக்கு வழங்க எதிர்ப்பு தெரிவித்ததால் ஒப்பந்தத்தை அமுலாக்குவதில் சிக்கல் எற்பட்டது. அணு ஆயுத பரவல் சட்டத்தில் இந்தியா இன்னும் கையெழுத்துபோடவில்லை. இதனால் தான் அந்த நாடுகள் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தன.

இந்த நிலையில் அமெரிக்கா சமரசத்தால் அனைத்து நாடுகளும் இந்தியாவுக்கு யுரேனியம் வழங்க முன்வந்தன. இதற்கான ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டன. எனவே அனைத்து நாடுகளும் இனி யுரேனியத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்யலாம்.

ஆனால் அவுஸ்திரேலியா தொடர்ந்து பிடிவாதமாகவே உள்ளது. ஒப்பந்தத்தில் கையெழுத்த போட்டு விட்டாலும் கூட இந்தியாவுக்கு இப்போது யுரேனியம் வழங்கமாட்டோம் என்றுஅறிவித்துள்ளது.

இது பற்றி அவுஸ்திரேலிய வர்த்தக மந் திரி சீமோன் கூறும் போது இந்தியா அணு ஆயுத பரவல் சட்டத்தில் கையெழுத்துபோட்ட பின் தான் நாங்கள் யுரேனியம் விற்பனை செய்வோம். அதுவரை மற்ற நாடுகள் கொடுத்தாலும் எங்களால்கொடுக்க முடியாது என்றார். (ஓ)

# போதைப்பொருள் கடத்தியவர் கன்னியா குமரியில் கைது

(கொழும்பு)

இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தியதாகக் கூறப்படும் நபர் ஒருவரை சென்னை போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் கன்னியா குமரியில் வைத்து கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் இந்திய மத்திய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கன்னியா குமரியில் இருந்து கடல் மூலமாக இலங்கைக்கு போதைப்பொருட்கள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலை அடுத்து பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரிடம் இருந்து சுமார் 40 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடத்தப்படும் போதைப்பொருட்கள் பின்னர் இலங்கையில் இருந்து ஏனைய நாடுகளுக்கு கடத்தப்படுவதாக சென்னை போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். ஓ

# நகைகளை விழுங்கிய பூனையை தேடி பொலிஸார் வலைவிரிப்பு

## இரத்தினபுரி பிரதேசத்தில் சம்பவம்

(கொழும்பு)

ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை விழுங்கிய பூனையொன்றைத் தேடி இரத்தினபுரி பொலிஸார் வலைவிரித்துள்ளனர். இப்பூனை அப்பிரதேசத்திலுள்ள சில வீடுகளுக்குள் புகுந்து அங்கிருந்த பெறுமதியான தங்க மோதிரங்கள் பெண்டன், காதணிகள் போன்றவற்றை விழுங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரி பிரதேசத்தில் நகைகள் காணாமல் போயுள்ளதாக தமக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ள போதிலும் குறித்த நகைகள் அனைத்தையும் பூனையே விழுங்கியுள்ளதா என்பதை உறுதியாக கூற முடியாதுள்ளதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியிலுள்ள வீடுகளின் படுக்கையறை இறாக்கைகளில் வைக்கப்பட்டிருந்த தங்க நகைகள் பல கடந்த வாரம் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந் நிலையில் மண்ணிறமான தெருப் பூனையொன்று வீடு ஒன்றில் புகுந்து தங்க நகைகளை விழுங்குவதை தான் கண்டதாக தோட்டக்காரர் ஒருவர் வீட்டு உரிமையாளருக்கு தெரியப்படுத்தியுள்ளதாக அம் முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் அப்பகுதியிலுள்ள மற்றுமொரு வீட்டில் நகையை விழுங்கிக்கொண்டிருந்த போது குறித்த பூனை கையும் களவுமாக பிடிபட்டுள்ளது. இருந்த போதும் பூனையின் தொண்டைக் குழியிலிருந்த நகையை வெளியில் எடுக்க முற்பட்ட வேளை பூனை தப்பிச் சென்றுள்ளதாக கூறப்படுகிறது. ஓ

# இந்திய வம்சா வளியினர் இலங்கையில் பின்தங்கிய சமூகமாக வாழ்ந்து வருகின்றனர்

இலங்கையின் இன முரண்பாடுகளும் மோதல்களும் இந்திய வம்சாவளி மக்களைப் பெரிதும் பாதித்து வருகின்றது. அவர்களுடைய வாழ்க்கை நிலை பதற்றமானதாகவும் பாதுகாப்பற்றதாகவும் காணப்படுகிறது. ஏராளமானவர்கள் தாய்நாட்டிற்கு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ. சந்திரசேகரன் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வாழும் இந்திய வம்சாவளி மக்கள் மகா சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய மாநாடு அவுஸ்திரேலியா, குயின்ஸ்லண்ட் நகரில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் சந்திரசேகரன்மேலும்தெரிவித்ததாவது,

அவுஸ்திரேலியாவில் குயின்ஸ்லாந்தில் நடைபெறும் கோபியோ பிரிவின் அங்குரார்ப்பண விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவ்விழாவிற்கு வருகை தருமாறு எனக்கு அழைப்பு விடுத்த கோபியோ குயின்ஸ்லாந்துப் பிரிவுத் தலைவர் உமெய்சந்திராவுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடல் கடந்த இந்தியர்களின் வரலாற்றில் கோபியோ அமைப்பின் எழுச்சி ஒரு மகத்தான திருப்புமுனை என்று நினைக்கிறேன். அதன் பின்புலத்தைச் சற்றுத் திரும்பிப் பார்க்க விரும்புகின்றேன். 19ஆம் நூற்றாண்டில் பெருந்தோட்ட தொழிலாளர்களாக இலங்கை, மலேசியா, தென்னாபிரிக்கா, பிஜி முதலிய நாடுகளுக்கு இந்தியர்கள் சென்று குடியேறியது வரலாறு. ஆனால் 20ஆம் நூற்றாண்டில் இக்குடியேற்ற வரலாற்றை மாற்றியமைக்கும் வகையில் கல்வித் தகுதியும் உயர் தொழில் தகைமையும் நிபுணத்துவத்தையும் கொண்ட இந்தியர்கள் பல மேலை நாடுகளில் நிபுணத்துவ தொழில்களில் ஈடுபட்டனர். இவர்கள் இந்தியாவில் மட்டுமன்றி மேலை நாடுகளிலும் கல்வி கற்றவர்களாக இருந்தனர். அத்துடன் மற்றொரு பிரிவினரான இந்தியர்கள் மேலைநாடுகளில் வர்த்தகத்தில் ஈடுபட்டு தொழில் அதிபர்களாக வளர்ச்சி பெற்று இன்று தாம் குடியேறிய நாடுகளில் மட்டுமின்றி தமது தாய் நாடாகிய இந்தியாவையும் வளம்படுத்த முன்வந்துள்ளமை ஒரு பெருமைக்குரிய விடயம். 19ஆம் நூற்றாண்டில் வெளிநாட்டு இந்தியர்களால் செய்ய முடியாததை 20ஆம் நூற்றாண்டு இந்தியர்கள் செய்துமுடித்துள்ளனர் அது தான் இன்று உலகளாவிய ரீதியில் எழுச்சிபெற்ற கோபியோ அமைப்பு.

உலகளாவிய அனைத்து வெளிநாட்டு இந்தியர்களின் சக்தியையும் ஒன்று படுத்தி அவர்களுடைய நலனையும் தமது தாய் நாட்டின் நலனையும் பேண கங்கணம் கட்டி ஏற்றம் கண்டுள்ள கோபியோ அமைப்பை நான் பாராட்டுகிறேன். அதன் தலைவராக பி.பி. தேவராஜ் தெரிவு செய்யப்பட்டதையிட்டு அவரது நாட்டவராகிய நான் பெருமையடைகிறேன். இன்று குயின்ஸ்லாந்தில் மலரவிருக்கும் கோபியோ பிரிவுக்கு எனது வாழ்த்துக்கள். அவுஸ்திரேலியாவில் வாழும் இந்தியர்களுக்கு ஒரு வேண்டுகோள். இலங்கை தவிர்ந்த ஏனைய நாடுகளில் வாழும் இந்தியர்கள் தமது கடுமையான உழைப்பின் அடிப்படையில் தமது சமூகப் பொருளாதார அரசியல் வாழ்வில் பல ஏற்றங்களையும் உச்சங்களையும் எட்டியுள்ளனர். அதன் காரணமாகவே பெருமை மிகு கோபியோ அமைப்பை அவர்களால் நிறுவ முடிந்தது. துரதிஷ்டவசமாக இலங்கையில் வாழும் 14 இலட்சம் இந்தியர்களால் இத்தகைய ஏற்றங்களை அடைய முடியவில்லை. அவர்களில் 9 இலட்சம் பேர் இன்றும் பெருந்தோட்டங்களுக்குள்ளேயே வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் 2 1/2 இலட்சம் பேர் மட்டுமே பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களாக பணிபுரிகின்றவர்கள் ஏனையோர் அவர்களில் தங்கி வாழ்கின்றனர். இவ்வாறு பெரும்பான்மையானவர்கள் பெருந்தோட்டங்களில் வாழ்வதால் இந்திய சமூகம் அந்நாட்டில் பெருந்தோட்ட சமூகம் என்று அழைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. தொன்மையான பெருமைமிக்க கலாசாரத்தை உடைய எமது சமூகம் இவ்வாறான பெயரைப் பெற்றுள்ளது.

இலங்கையில் வாழும் நான்கு பிரதான சமூகங்களில் இந்தியர் சமூகமே கல்வி, சுகாதாரம், வீடு வசதி, அரசாங்கத் தொழில் என்னும் பல்வேறு விடயங்களில் பின்தங்கியுள்ளதாய் இலங்கையிலேயே மிகவும் பின்தங்கிய சமூகம் என்ற பெயரையும் பெற்றுள்ளது. கடந்த 2 நூற்றாண்டு காலத்தில் எண்ணற்ற துன்ப அனுபவங்களை அவர்கள் எதிர்நோக்கி சிரமங்களுக்குள்ளாகியிருந்த போதும் இன்றைய அரசியல் சூழ்நிலை அவர்களுடைய மேம்பாட்டிற்கு பொருத்தமானதாகவும் இருக்கவில்லை. இலங்கையின் இன முரண்பாடுகளும் மோதல்களும் இந்தியர் சமூகத்தை பெரிதும் பாதித்து வருகிறது. அவர்களுடைய வாழ்க்கை நிலை பதற்றமானதாகவும் பாதுகாப்பற்றதாகவும் உள்ளது. ஏராளமானவர்கள் தாய் நாட்டிற்கு திரும்பவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வாழும் ஏனைய இந்தியர்களை போல் இலங்கையின் இந்திய சமூக இந்திய நாட்டின் மேம்பாட்டிற்கு உதவி செய்யும் நிலையில் இல்லை என்பது துரதிஷ்டமான விடயம். அம்மக்கள் தமது மேம்பாட்டிற்கு இந்திய அரசின் உதவியை எதிர்பார்க்கும் நிலை தான் தற்போது காணப்படுகிறது. தற்போது இந்திய அரசும் எமது மக்களுக் கான சில மேம்பாட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. கல்வி, புலமைப்பரிசில் வழங்கல் சுகாதாரத்துறை போன்ற துறை சார்ந்தவையாக அச் செயற்திட்டங்கள் உள்ளன.

இலங்கையில் பின் தங்கியுள்ள சமூகத்தினருக்காக மட்டுமின்றி வெளிநாடுகளில் வாழும் இந்திய சமூகத்தினருக்கும் பின்தங்கியவர்களாக வாழும் இலங்கை வாழ் இந்திய மக்களின் மேம்பாடு குறித்து அவுஸ்திரேலிய இந்திய சமூகம் சற்று சிந்திக்கவேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

கொள்கையளவில் இதனை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களாயின் எனது மக்களின் மேம்பாடு நோக்கிய பல செயற்றிட்டங்களை உங்களுக்கு வழங்க எனது அமைச்சு அதாவது சமூதாய அபிவிருத்தி சமூக அநீதி ஒலிப்பு அமைச்சு இதற்காக முன்வரும்.

இதனைவிட பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டிற்கு என அவர்களுக்கு அடிக்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான ஒரு அமைச்சும் உண்டு. இவை யாவும் இருந்தாலும் எமக்கு மேலதிக உதவிகள் தேவைப்படுகின்றன. இம் மக்களின் மேம்பாடுகளை முன்னெடுத்துச் செல்லத் தேவையான நிதிவழங்களை போதுமான அளவிற்கு வழங்கும் நிலையில் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி பெறவில்லை. எனது நாட்டின் போர் நிலைமைகள் அதற்கு சாதகமாகவும் இல்லை. இவ்வாறான பின்புலத்தில் தான் வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் தமது நிகழ்ச்சி நிரலில் எனது மக்களையும் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். இந்திய மக்களின் ஒரு பிரிவினர் வாழ்க்கையில் பல ஏற்றங்களை கண்ட நிலையில் மற்றொரு பிரிவினரின் மேம்பாட்டிற்கு உதவுவது ஒரு பரந்த தாக்கத்தை அம் மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் என்பது எனது நம்பிக்கை. ஓ

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வீழி

Botanical Name - Cadaba fruticosa

Family -Cappari daceae

பல கிளைகளையுடைய பெருஞ் செடிவகையைச்சார்ந்தது .இதன்பட்டை மண்ணிறமாகவும் நார்த்தன்மையுடைய தாகவும் இருக்கும். இலைகள்

2.5-3.0 செ.மீ நீளமாகவும் கோள வடிவமைப்புடையதாகவும் இருக்கும்.பூக்கள் மங்கிய வெள்ளை நிறமுடையவை. மஞ்சள் கலந்த சிவப்பு நிறமுடைய பழங்களுள் கறுப்பு நிற விதைகள் காணப்படும்.

### பரம்பலும் இனவிருத்தியும்

யாழ் மாவட்டத்தில் நாவற்குழி,கைதடி , மருதனார்மடம், சரசாலை மற்றும் நெடுந்தீவு பிரதேசத்தில் பரம்பல் அதிகம் அவதானிக்கப்பட்டுள்ளது. இம் மூலிகையை வேர்க்கன்றுகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.


### மருத்துவப் பயன்கள்

இதன் உலர்ந்த இலைகளைப் பொடித்து கோப்பி விதைகளுடன் சேர்த்து இடித்து கோப்பி மென்பானமாக பயன்படுத்தினால் இரும்புச்சத்து நிறைந்த மென்பானமாவதுடன் ,உடலிற்கு நல்ல பலத்தையும் கொடுக்கும்.

இதன் இலைகளை துவையல் செய்து, அல்லது சமைத்து உண்ணின் கரப்பான், வெள்ளை ,பசியின்மை ,வயிற்றுப்புழு, வெளிக்குப்போகாமை இலைகளை போக்கி உடலிற்கு வன்மையைத் தரும்.

இலையைக் குடிநீரிட்டு ஆமணக்கு நெய் சேர்த்துக்கொடுக்க கழிச்சலை உண்டாக்கி புழுக்களை வெளிப்படுத்தும் வாத, பித்த கபக்குற்றங்களை தன்னிலைப்படுத்தும்.

இலையை வதக்கி கட்டிகளுக்கு வைத்துக் கட்ட கட்டிகளின் வீக்கம் தணியும். அல்லது இலையை நீரிட்டுக் காய்ச்சி வீக்கங்களின்



மீது யாதுமொரு தைலத்தையும் பூசியபின் இந் நீரை விட்டுக்கழுவ ,வீக்கம் குறையும்.

முதிர்ந்த வீழியின் பட்டைகள் மஞ்சள் கலந்த வெண்ணிறமாகவும் நார்த்தன்மை நிறைந்ததாகவும் சிறிது கடினமானதாகவும் காணப்படும். நார்த்தன்மையான இதன் குச்சிகளை பல்தீட்ட பயன்படுத்தலாம். (Tooth brush) போன்றது.

வீக்கத்துடன் கூடிய மூட்டு வியாதிகளில் இதன் இலைகளை சிறுகச் சிறுக அறிந்து பொட்டணியாக துணியில் முடிந்து கட்டி தைலம்பூசிய பின்பு பொட்டாணியை சூடு காட்டி ஒத்தடம் கொடுக்க வீக்கம் குறைந்து வலிதணியும்.

குறிப்பு :-வீழியின் கிழங்கு பசும் பொன்னிறமாக இருக்கும்.வெட்டி சோதித்து நீர்த்தளத்தில் நிற்கும் மூலியை வெட்டிப்பார்த்தால் நுனியில் தேங்காயைப் போல் இருக்கும்.

இதன் இலையை வாயிலடக்கி எவ்வளவு தூரமும் ஓடலாம். நிற்கும் போது ஏதாவது ஒன்றை பிடித்துக்கொண்டு நிற்க வேண்டும் . அவ்வளவு சக்தியை கொடுக்கக்கூடிய ஒரு மூலிகையாகும். சித்தர்கள் தமது இரசவாதத்தில் இம் மூலிகையை பயன்படுத்தியுள்ளார்கள்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் , சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம் ,கைதடி.

இவ்வாறு அரிய செய்கைகளைக் கொண்ட மருத்துவ பகுதிகளையுடைய இம் மூலிகையின் சில பகுதிகளை நாம் நமது அன்றாட வாழ்வில் முன்பு கூறிய மருத்துவ குணங்களில் அடிப்படையில் பயன்படுத்தினால் அதிலொரு பகுதி ஆரோக்கியத்தை யாவது பெற முடியும் அல்லவா ? அத்துடன் மூலிகைகள் சேகரிக்கும் இடங்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

# இலங்கையில் யுத்தத்தை நிறுத்துவது தொடர்பில் இந்தியா தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும்

## இந்தியாவிடம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்கள் மீதான யுத்தத்தினை நிறுத்துவது தொடர்பில் இந்தியா தீர்க்கமான முடிவு ஒன்றினை எடுக்க வேண்டும். யுத்தம் தொடர வேண்டுமா? அல்லது நிறுத்தப்பட வேண்டுமா? என்பதை தீர்மானிக்கும் வல்லமை இந்தியாவுக்கு உண்டு என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்திற்கான பாகிஸ்தானின் இராணுவ உதவி தொடர்பில் கடுமையான அதிருப்தியை இந்தியா வெளியிட்டு இருக்கின்ற நிலையில், இறுதிப் போர் என்பதும் இராணுவ நடவடிக்கை என்பதும் தீர்வினைப் பெற்றுத்தராது என பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் தெரிவித்திருந்தமை சர்வதேசம் அறிந்த விடயமாகும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

பயங்கர வாதிகளை அழித்தொழிக்கும் அரசாங்கம் மேற்கொண்டு வரும் யுத்தத்தினை நிறுத்துவதற்கு இந்தியா ஒரு போதும் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க போவ தில்லையென தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச மற்றும் அரசாங்க அமைச்சர் மஹிந்த யாப்பா அபயவர்த்தன ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.கள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்தாலும் கூட்ட மைப்பினரின்கோரிக்கைக்கு இந்தியா செவி சாய்க்காது. எனவும் இவர்கள் தெரிவித்தனர்.

இக்கருத்துக்கள் தொடர்பாக கேட்ட போதே சிவாஜிலிங்கம் எம்.பி. இவ்வாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததா வது,

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான யுத்தம் என்ற போர்வையில் சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களை அளித்துக் கொண்டு இருக்கின்றது. இதன் மூலம் இனச் சுத்திகரிப்பு செயற்றிட்டத்தையே நடை முறைப் படுத்தி வருகின்றது.

வடக்கிலே வன்னிப் பகுதியில் தொடுக்கப்பட்டு இருக்கின்ற யுத்தத்தால் இலட்சக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர். இன்றைய அரசாங்கத்தால் குழந்தைகள் சிறுவர்கள் என அனைத்துத் தரப்பினரும் புலிகளின் பட்டியலில் இணைக்கப்பட்டு அழிக்கப்படுகின்றனர். ஏனையோர் சீரழிந்து சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை வந்திருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் யுத்தம் தொடர்பிலும் இராணுவ நடவடிக்கை தொடர்பிலும் கருத்துக்கள் தெரிவித்திருந்தார். இராணுவ நடவடிக்கை தீர்வினை பெற்றுத்தராது என்று தெளிவாகத் தெரிவித்திருந்தார்.

அதேபோல், இறுதி யுத்தம் என்பதும் இராணுவ நடவடிக்கை என்பதும் இலங்கையைப் பொறுத்த மட்டில் ஒத்துவராத விடயம் எனவும் அது சாதகமானதொரு தீர்வினை பெற்றுத் தரப் போவதில்லை என் றும் இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் தெரிவித்திருந்தார். இதனை இலங்கை அரசாங்கம் மட்டும் அல்லாது சர்வதேசமே அறிந்துள்ளது.

அத்துடன் இலீங்கை அரசாங் கத்துக்கென இராணுவத்தளபாட உதவிகளை பாகிஸ்தான் வழங்கியமை தொடர்பிலும் இந்தியா தனது கடும் அதிருப்தியை வெளியிட்டு இருந்தது. இப்படியானதொரு நிலையில் தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள யுத்தத்தை இலங்கை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்ற அழுத்தத்தை இந்தியா கொடுக்கப் போவதில்லை என்று இவர்களால் எப்படிக் கூறமுடியும். அப்படிக் கூறுவதற்கு அரசாங்க தரப்பினரும் வீரவன்சவும் இந்தியாவின் பேச்சாளர்களாக மாறிவிட்டனரா என்பதையும் கேட்க விரும்புகிறோம்.

வடக்கிலே தமி ழர்கள் அனுபவித்துக் கொண்டு இருக்கின்ற அவலங்கள் தொடர்பில் இந்தியா இராஜ தந்திர ரீதியாக அழுத்தம் கொடுத்துக் கொண்டு இருப்பதை நாம் நன்கு அறிவோம்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம்,புலிகள் மீதான யுத்தம் என்ற போர்வையில் தமிழ் மக்களை அழித்துக் கொண்டு இருக்கும் யுத்தத்தினை மேலும் தொடர்வதற்கு இந்தியா வழிவகுக்கப் போகிறதா? யுத்தம் தொடர வேண்டுமா? அல்லது மக்களை காக்கும் விதத்தில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமா? என்ற இறுதித் தீர்மானத்தை இந்தியாவே எடுக்கவேண்டும்.

தாமதிக்கின்ற ஒவ்வொரு நிமிடத்திலும் அப்பாவித் தமிழரின் உயிர்கள் பறிக்கப்பட்டு இருக்கின்றன. ஓ

# நாட்டின் தேசிய பிரச்சினைகளுக்கு யுத்தத்தின் தீர்வு பெறமுடியாது

## மல்வத்த மகாநாயக்க தேரர்

யுத்தத்தின் மூலம் நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க முடியாதெனக் கண்டி மல்வத்த மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்த ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்வதற்கான காலம் இன்னமும் கடந்து விடவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தத் தீர்மானம் மிக்க தருணத்தில் கூட ஆயுதங்களைக் களைந்து ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்ள பிரபாகரனுக்கு சந்தர்ப்பம் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்

தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேனவுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக நீரோட்டத்தில் இணைவதன் மூலம் தமதுபிரதேச மக்களுக்கு அளப்பெரிய சேவையை ஆற்றக்கூடிய சந்தர்ப்பம் பிரபாகரனுக்கு கிட்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தினால் பீடிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு பிரபாகரனினால் மிகச்சிறந்த வகையில் சேவை ஆற்ற முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# பி.பீ. ஜயசுந்தர தொடர்ந்தும் பதவி வகிப்பது தொடர்பில் விளக்கமளிக்கவும்

## சட்டமா அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

திறைசேரியின் செயலாளரும் நிதியமைச்சின் செயலாளருமான கலாநிதி பீ.பி.ஜயசுந்தர தொடர்ந்தும் அரசாங்கத்தில் பதவி வகிப்பது குறித்து விளக்கமளிக்குமாறு சட்டமா அதிபருக்கு உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

அரசியல் யாப்பை பாதுகாத்து பேணுவதாக பதவிப்பிரமாணம் செய்துகொண்ட நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பீ.ஜயசுந்தர அரசியல் அமைப்பை மீறியுள்ளதாக உயர் நீதிமன்றம் ஏலவே தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும் உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் சுட்டிக்காட்டியது.

நிதியமைச்சின் செயலாளர் பொறுப்பற்ற ரீதியில் செயற்பட்டு மில்லியன் கணக்கான ரூபாய்கள் அரசங்கத்திற்கு கிடைக்காமல் போனவை தொடர்பில் நிதியமைச்சின் செயலாளருக்கு நேரடி தொடர்பு இருந்ததாக கடந்த யூலை மாதம் 21ஆம் திகதி உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தது. ஜனநாயக இடது சாரிக்கட்சித்தலைவர் வா சுதேவ நாணயக்கார தாக்கல் செய்திருந்த மனுவை பரிசீலணைக்கு எடுத்துக் கொண்ட போதே நீதிமன்றம் இந்ததீர்ப்பை வழங்கியி ருந்தது.

துறைமுக அதிகார சபைக்குச் சொந்த மான 8 ஏக்கர் காணியை தணியாருக்கு வழங்கியதன் மூலம் அரசுக்கு சொந்தமான 90 வீதமான பங்குகள் தனியாருக்கு வழங்கி அரசாங்கத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தியதாக கலாநிதி பி.பீ.ஜயசுந்தர மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அரசியல் யாப்புக்கமைய செயற்படுவதாக பதவிப்பிரமாணம் செய்துவிட்டு அதனை மீறிய ஒருவர் தொடர்ந்தும் அப்பதவியை வகிப்பதற்கு தகுதியற்றவர் என்று தெரிவித்த உயர் நீதிமன்றம் இது தொடர்பில் எதிர்வரும் 29ஆம் திகதி விளக்கமளிக்குமாறும் சட்டமா அதிபருக்கு உத்தவிட்டது. ஓ

# கொழும்பு குளிர் பிரதேசமாகலாம் மீண்டும் சுனாமி ஏற்படலாம்

## சிரேஷ்ட விஞ்ஞானி எச்சரிக்கை

(கொழும்பு)

கண்டியை விடவும் கொழும்பு எதிர்காலத்தில் அதிக குளிர்மிக்க பிரதேசமாக மாறுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட விஞ்ஞானி ஒருவர் எச்சரித்துள்ளார்.

அத்துடன் இந்தியாவின் உத்தர பிரதேஷில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தினால் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ள நிலையில் இலங்கையிலும் அவ்வாறு எற்படலாம் எனவும் அவர் எதிர்வு கூறியுள்ளார்.

கால நிலை மாற்றம் மற்றும் பூகோள வெப்பமடைதல் ஆகிய காரணிகளாலேயே இந்த மாற்றங்கள் ஏற்படலாம் எனவும் சிரேஷ்ட விஞ்ஞானி எச்.ஜீ.எஸ். ஆரியரத்ன குறிப்பிட்டார். வெப்பநிலை அதிகரிப்பதன் காரணமாக நீராவியின் அளவு அதிகரிப்பதுடன் முகில் கூட்டங்களும் அதிகரிக்கின்றன. பின்னர் வெப்ப நிலையைக் குறைக்கும் பொருட்டு இவை பாரிய மழையாகப் பூமிக்குத் திரும்புகின்றன. இதனாலேயே வெள்ளம், மண்சரிவு என்பன ஏற்படுகின்றன. இது பின்னர் நாட்டை உணவுப் பிரச்சினைக்கு இட் டுச் செல்லக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார். இவ்வாறான தொரு சூழ் நிலையில் கொழும்பு நகரும் கண்டி போன்ற வழமையான குளிர் பிரதேசங் களைப் போன்று மாறுவதற்கான சாத்தியங்கள் உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

பூகோள வெப்பமடைதலினால் ஏற்படும் உலகளாவிய மாற்றங்களின் காரணமாக மீண்டும் ஒரு தடவை சுனாமி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட பூமியதிர்ச்சி காரணமாக வெளிவிடப்பட்ட பாரிய சக்தி வாய்ந்த அலைகளால் சுனாமி அனர்த்தம் ஏற் பட்டதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர் இவ்வாறான தொரு சக்தி மாற்றத்தின் காரணமாக புவியீர்ப் பில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு எனவும் இலங்கையின் சில பகுதிகள் இதனால் பாதிக்கப்படலாம் எனவும் எச்சரித்துள்ளார். இதன் காரணமாக இலங்கையின் பஹிர வகந்த வலப்பனை போன்ற பகுதிகளில் நிலச் சரிவு ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உண்டு என வும் அவர் தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக இலங்கைக்கு இவ் வாறான அபாயங்கள் இல்லாவிட்டாலும் பூ கோள வெப்பமடைதல் காரணமாக ஏற்படும் மாற் றங்களால் இவை ஏற்படலாம் என்றும் விஞ் ஞானி ஆரியரத்ன குறிப்பிட்டார்.

இதனை எதிர்கொள்ள பூகோளவியலாளர்கள் உயிரியலாளர்கள் மற்றும் விவசாயத் துறை நிபுணர்கள் அனைவரினதும் ஒன்றிணைந்த செயற்பாடுகள் அவசியம் எனக் குறிப் பிட்ட அவர் இதன்பொருட்டு இலங்கைக்கு நவீன தொழில் நுட்பங்கள் அவசியம் எனவும் தெரிவித்துள்ளார். ஓ

# ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவராக ருக்மன் சேனநாயக்கா?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக கட்சியின் தற்போதைய தவிசாளர் ருக்மன் சேனாநாயக்காவை நியமிக்கத் திட்டமிடப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் காலத்தில் நடைபெறவுள்ள கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்த நியமனம் மேற்கொள்ளப்படலாம் என கட்சியின் உள்விவகாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியை மறுசீரமைப்பதற்கு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளதனால் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ள மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பல முக்கிய நியமனங்கள் இடம் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியில் மூன்று உப தலைவர்கள் நியமிக்கப்பட வுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கட்சியின் தேசிய அமைப்பாள எஸ் பி. திஸாநாயக்க, காமினி ஜயவிக்கிரம பெரேரா, சஜித் பிரேமதாஸ ஆகியோர் கட்சியின் உப தலைவர்களாக நியமிக்கப்படவுள்ளனர். ஓ

# பாடசாலை செல்லாததற்கு வறுமையே காரணம்

## ஜகத் வல்லவற்ற தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் உள்ள பிள்ளைகளில் ஐந்து வீதமானவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை என்றும் இதற்கு வறுமையே முக் கிய காரணம் எனவும் தேசிய சிறுவர் பாது காப்பு அதிகார சபையின் தலைவர் ஜகத் வல்லவற்ற தெரிவித்தார்.

குறிப்பாகத்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள், யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்துள்ள பிள்ளைகளே அதிக ளவுக்குப் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை எனவும் அவர் தெரிவித்தார். சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக இவ் வாண்டு ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரையுமான முதல் எட்டு மாதங்களில் 318முறைப் பாடுகள் கிடைத்துள்ளன.

கடந்த ஆண்டு முதல் எட்டு மாதங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாகச் செய்யப்பட்டமுறைப்பாடுகளைவிட இவ்வாண்டே அதிகரித்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். ஓ

நுண்ணறிவுடன் அன்பும் இறைபக்தியும் சேர்ந்து விட்டால் அதனால் அடைய முடியாதது எதுவுமில்லை. — கெதே

வலம்புரி

## பக்க வாத்தியத்தை ‘பக்கா’ வாத்தியமாக்கிய குன்னக்குடி வைத்தியநாதன்

வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதன் காலமாகி விட்டார் என்ற செய்தி இசை உலகை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

வயலின் வாத்தியம் பாடலுக்குப் பக்க வாத்தியமாக அமைந்த கருவி. ஆனால் அந்தப் பக்க வாத்தியக் கருவியை ‘பக்கா’ வாத்தியமாக்கிய உலகப் பெருமை குன்னக்குடி வைத்தியநாதனையே சாரும்.

உலகின் எந்த மூலையிலும் வயலின் என்றால் குன்னக்குடி வைத்தியநாதன் என்று கூறும் அளவுக்கு வயலின் இசையில் தனக்கு மிக்காரும் ஒப்பாரும் இல்லாத் தனிப்பெரும் மேதையாக விளங்கிய பெருமை குன்னக்குடி வைத்தியநாதனையே சாரும்.

வயலின் இசை மூலம் உலக மாந்தர்க்கு இனிமையும் ஆறுதலும் தந்த மேதையின் மறைவு இசை உலகில் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

யாழ்ப்பாண மண்ணுக்குக் குன்னக்குடி வைத்தியநாதன் 2003 ஆம் ஆண்டு வந்திருந்தார். அப்போது இந்து கலாசார அமைச்சராக இருந்த காலஞ்சென்ற தி.மகேஸ்வரன், அவரை அழைத்து வந்திருந்தார்.

நல்லூர் முன்றலில் அவரின் வயலின் இசை விருந்தை நுகர்ந்து இன்புறுவதற்காகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். வயலின் இசை மழை பொழிய முன்னதாக அங்கு கூடியிருந்த யாழ்ப்பாண மக்களுக்கு உரையாற்றிய குன்னக்குடி வைத்தியநாதன்,

ஈழத் தமிழர்களுக்கு நிரந்தர அமைதியும், சமாதானமும் கிடைக்கப் பிரார்த்திப்பதாகக் கூறி வயலின் இசை பொழிந்தார்.

இடையிடையே அவரின் சொல்லாடல் கூடியிருந்த மக்களை இனிமைப்படுத்தியது. யாழ்ப்பாணத்து நல்லூரில் வயலின் இசை வழங்குவதில் பெருமை அடைகின்றேன். இசைத் துறையில் எழக் கூடிய சந்தேகங்களை ஐயம் தெளிவுற விளக்கும் பேரறிவு படைத்த மகாவித்துவான் வீரமணி ஐயர் பிறந்த யாழ்ப்பாண மண் எனக் புகழாரம் சூட்டியபோது, கரகோஷம் வானை அதிர வைத்தது.

திறமையை, ஆழ்ந்த அறிவுப் புலத்தை வெளிப்படையாகக் கூறும் பக்குவம் நிறைந்த வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதனின் மற்றுமோர் சிறப்பு, எந்த நாட்டில் வயலின் இசைக் கச்சேரி நடத்தினாலும் நெற்றி நிறைய திருநீறு அணிந்து கொள்வதாகும்.

இவ் உயரிய செயல் இறைவன் மீது அவர் கொண்ட அளவு கடந்த பக்தியையும் இறைவனுக்கு தனது இசையை அர்ப்பணிக்கும் பாங்கினையும் எடுத்துக் காட்டுவதாகும்.

இத்தகைய உயர்சிறப்பு மிக்க வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதன், யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது வலம்புரி நாளிதழின் அலுவலகத்திற்கும் வருகை தந்தார் என்பதை நினைந்து அவரின் ஆத்மா ஆடவல்லானின் இசையுடன் கலக்கட்டும்.

# இராணுவ நடவடிக்கைகளால் புலிகள் தோல்வியடைகின்றனர்

## பிரதமர் நாடாளுமன்றத்தில் உரை

(கொழும்பு)

அரசாங்கப் படைகளின் இராணுவ நடவடிக்கைகளால் தோல்வியைத் தழுவி வரும் விடுதலைப்புலிகள் ஓடி ஒளிப்பதாகப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார். எனினும் அவ்வாறு ஓடி ஒளிக்கும் புலிகளைப் பாதுகாப்பதற்குத் தென்பகுதியிலுள்ள சிலர் முயற்சிப்பதாகவும் புலிகளைப் பாதுகாப்பதற்காக யுத்தத்தை முடிபுக்குக் கொண்டு வர அவர்கள் முயற்சிப்பதாகவும் பிரதமர் குற்றஞ்சாட்டினார்.

நேற்று அவசர காலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். யுத்தம் மூலம் பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதையே நாட்டு மக்கள் விரும்புகின்றார்கள் என்பதை அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தல்கள் எடுத்துக் காட்டியிருப்பதாகத் தெரிவித்த பிரதமர்,

ஒரே மூச்சில் பயங்கரவாதத்தை ஒழித்து விட வேண்டும் என்பதற்காகவே அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகக் கூறினார். அடுத்த சந்ததியிடம் யுத்தத்தை விட்டுச் செல்லத் தாம் விரும்பவில்லை எனவும் கூறினார்.

கடந்த ஒரு மாத காலத்தில் இடம்பெற்ற வன் முறைச் சம்பவங்களில் 155 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 4 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்புத் தரப்பில் 983 பேர் காயமடைந்ததாகவும் பொதுமக்கள் தரப்பில் 52 பேர் காயமடைந்ததாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

### யுத்தத்தின் உண்மைத் தகவல்கள் வெளியாவதில்லை

நேற்று வவுனியா இராணுவத் தலைமையகத்தின் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல்களில் ராடர்கள் ஒழிக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரட்ண நாடாளுமன்றத்தில் கூறினார்.

வட பகுதியில் இடம்பெறும் யுத்தம் தொடர்பான பொய்யான தகவல்களே வெளியில் வருவதாகவும் உண்மைத் தகவல்கள் வெளியாவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். அங்கு இடம்பெற்ற மோதல்களில் பாதுகாப்புத் தரப்பில் பலர் கொல்லப்பட்டதாகவும் அவர் கூறினார்.

— உதாரணமாக 2006 ஆம்ஆண்டு முதல் இதுவரை ஆயிரத்து 851 படையினர் கொல்லப்பட்டதுடன் 9 ஆயிரத்து 901 பேர் காயமடைந்துள்ளனர். இவை உத்தியோகபற்றற்ற தகவல். இதுவே இவ்வாறாயின் உத்தியோகபூர்வ தகவல் இதனை விட அதிகமாகவே இருக்கும் என்றார் அவர். (ச–5)

# தமிழர் பிரச்சினையை சிங்களத்தில் வெளிப்படுத்துவதை பறிக்க வேண்டாம்

## மனோ கணேசன் அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

தமிழர் பிரச்சினைகளைச் சிங்கள மொழியூடாக நாட்டின் பெரும்பான்மை மக்களுக்கு வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பத்தைப் பறிக்க வேண்டாம் என மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தமிழர் பிரச்சினைகளைச் சிங்கள மொழியூடாகக் குரல் கொடுக்கக் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் தம்மை அடக்கு முறைக்கு உட்படுத்தச் சில சக்திகள் முயற்சிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் மனோ கணேசன் பல மணித்தியாலங்கள் விசாரிக்கப்பட்டதுடன் அரச ஊடகங்களில் மனோ கணேசனுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் தொடர்பு காண்படுவதனைப் போன்று செய்திகள் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சட்டத்தை மதிக்கும் நாட்டின் பிரஜை என்ற ரீதியில் எந்த ஒரு விசாரணைக்கும் தாம் தயார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தனது தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாக மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நாடு பிளவுபடாதிருப்பதனைத் தடுக்க வேண்டுமானால் தமிழர்களின் நல்லெண்ணத்தை வென்றெடுக்கக் கூடிய வகையிலான அதிகாரப் பரவலாக்கல் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தமது கட்சி காணப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச–5)

# வடக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகள் நேற்றைய சம்பவத்தால் தடைப்பட்டது

(வவுனியா)

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற மோதல்கள் காரணமாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையையடுத்து வடக்கு மாகாண விளையாட்டு போட்டிகள் நேற்று நடைபெறவிருந்த 19,21 வயதுப்பிரிவினருக்கான போட்டிகள் நடைபெறவில்லை.

க.பொ.த. உயர் தரப்பரீட்சை காரணமாக வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு போட்டிகளில் 19 மற்றும் 21 வயதுப் பிரிவினருக்கான போட்டிகள் நேற்றும், இன்றும் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி மைதானத்தில் நடாத்த திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் வவுனியாவில் நேற்று இடம்பெற்ற விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான மோதல் காரணமாக வவுனியா முழுவதும் வழமையான இயல்பு நிலை முற்றாகப் பாதிப்படைந்தது.

இந்நிலையில் வடக்கு மாகாண பாடசாலைக்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் 19, 21 வயதுப் பிரிவினருக்கான நேற்று நடைபெறவிருந்த முதல் நாள் போட்டிகள் நடைபெறவில்லை.

இதனால் இன்று வவுனியாவில் இயல்புநிலை வழமைக்கு திரும்புமாயின் நேற்று நடைபெறவிருந்த போட்டிகள் இன்று நடைபெறுவதுடன் இன்றைய போட்டிகள் நாளை நடைபெறுமென வடக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) எஸ்.சத்தியபாலன் தெரிவித்தார். (ச–5)

# ஐ.நா. பணியாளர்கள் வெளியேறுகின்றனர்

(வன்னி)

வன்னியில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டு வந்த பணியாளர்கள் கட்டம் கட்டமாக வெளியேற ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு அரசாங்கம் சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு உத்தரவு பிறப்பித்திருந்தது.

பூரணமாக வெளியேறுதல் தொடர்பான காலவரையறையை குறிப்பிட முடியாது எனவும் இந்தவாரத்திற்குள் வேறு இடத்தில் தமது பணிகளை தொடர்வது தொடர்பாக தீர்மானிக்கப்படும் எனவும் ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இரு தரப்பிற்கும் இடையிலான யுத்தம் உக்கிரமடைந்திருப்பதனால் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தன்னார்வ தொண்டர்களை துரிதகதியில் குறித்த பிரதேசங்களிலிருந்து வெளியேற்றிக் கொள்ளுமாறு இலங்கை அரசாங்கம் சர்வதேச தொண்டு நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ச–5)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## ஆளுமை வளர்ச்சியின் விதிமுறைகள்



இந்த ஆளுமையை வளர்க்க உதவுகின்ற நியதிகளைக் கண்டு பிடித்திருப்பதாக யோக சாஸ்திரம் கூறுகிறது. அந்த நியதிகளையும் முறைகளையும் ஒழுங்காகக் கவனத்துடன் பின்பற்றுவதால் ஒவ்வொருவரும் தன் ஆளுமையை வலுப்படுத்திக்கொள்ள முடியும் என்கிறது அது.

செயல்முறை வாழ்க்கைக்குரிய முக்கிய விஷயங்களுள் இது ஒன்று. கல்வி என்பதன் ரகசியம் இதுவே. இதனை அனைவரும் செயல் முறைப் படுத்திக் காணமுடியும். இல்லறத்தார், ஏழை, செல்வந்தர், தொழிலாளி, ஆன்மீகவாதி என்று ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் ஆளுமையை வலுப்படுத்துவது என்பது முக்கியமான ஒன்று.

## விடுதலைப் புலிகளி...

நோக்கி புலிகள் பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

அதன்போது தரைவழியாகவும் தாக்கத் தொடங்கினர். விமானப் படையின் ராடர் மையத்தை தாக்கி அழிப்பதே அவர்களின் நோக்காக இருந்தது. அந்தவேளை படையினர், புலிகளை எதிர்த்து தாக்குதல் நடத்தினர். விடுதலைப் புலிகளால் ராடர் மையத்திற்கு அருகில் கூட செல்லமுடியவில்லை. விடுதலைப் புலிகளின் 11 உடல்கள் கைப்பற்றப் பட்டுள்ளன.

பீரங்கித் தாக்குதல்கள் 5.45 மணி வரை தொடர்ந்தது. விடுதலைப் புலிகள் சுமார் 70 பீரங்கிக் குண்டுகளை இராணுவத் தளம் மீது ஏவியுள்ளனர். தாக்குதலின் போது விடுதலைப் புலிகளின் இரண்டு இலகு ரக விமானங்கள் படைத் தள வளாகம் மீது பறந்து சென்று 4 குண்டுகளை வீசின. இதில் இரண்டு குண்டுகள் இராணுவ முகாம் மீது வீழ்ந்து வெடித்தன. மற்றைய இரண்டும் குறி தவறி விட்டன என்றார்.

புலிகளின் விமானங்களை அழிப்பதற்காக கட்டுநாயக்க விமானத் தளத்திலிருந்து சென்ற எமது போர் விமானங்கள் புலிகளின் விமாணங்களை பின் தொடர்ந்து சென்று அதில் ஒரு விமானத்தை தாக்கி அழித்துள்ளன.

இத் தகவல் புலிகளின் தகவல்கள் மூலமும் தமது புலனாய்வுத் தகவல் மூலமும் உறுதி செய்யப்பட்டுள்ளது என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை இந்தியர்கள் எவரும் அம்முகாமில்இல்லை எனவும் அவர் கூறியுள்ளார். விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவதற்கு எவ்வாறு இராணுவ முகாமுக்குள் வந்தார்கள் என்பது குறித்து தாம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் கூறினார். (ச-5)

## வவுனியா ராடர் தளம்...

கண்காணிப்பு கதுவீ அல்லது ராடர் நிலையத்தை இலக்கு வைத்து நேற்று அதிகாலை 3.05 மணிக்கு கரும்புலிகள் அதிரடித் தாக்குதலை நடத்தினர். இதில் அந்த கதுவீ -ராடர் நிலையம் முற்றாக அழிக்கப்பட்டது.

அதியுயர் பாதுகாப்பு கொண்ட வான்படை மற்றும் வன்னிக் கூட்டு நடவடிக்கைத் தலைமையகம் உள்ளடங்கிய தளத்திற்குள் கரும்புலிகள் ஊடுருவி உள்நுழைந்து தாக்குதல் நடத்திய அதேவேளை இவர்களின் உதவியுடன் படைத் தளத்தின் மீது வான் புலிகளின் வானூர்தி தாக்குதல்களும் கேணல் கிட்டு பீரங்கிப் படையினரின் செறிவான ஆட்டிலறி பீரங்கித் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

இத்தாக்குதல்களில் படையினர் இருபதுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். வெடிபொருள் களஞ்சியங்களும் தொலைத் தொடர்பு கோபுரமும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப ஆய்வகமும் வானூர்தி எதிர்ப்பு ஆயுதமும் முற்றாக தாக்கியழிக்கப்பட்டன.

படையினரின் வன்னித் தலைமையகமும் சிறப்பு படையணியின் வன்னித் தலைமையகமும் பெரும் சிதைவுக்குள்ளாகின.

தாக்குதல் நடத்திய வான்புலிகளின் வானூர்திகள் பாதுகாப்பாக தளம் திரும்பின. இத் தாக்குதல்களில் கரும்புலிகள் 10 பேர் வீரச் சாவைத் தழுவிக்கொண்டனர்.

படைத் தலைமைக்கும் அரசுத் தலைமைக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள இத்தாக்குதலில் கரும்புலி லெப்டினன்ட் கேணல் மதியழகி, கரும்புலி மேஜர் ஆனந்தி, கரும்புலி கப்டன் கனிமதி, கரும்புலி கப்டன் முத்துநகை, கரும்புலி கப்டன் அறிவுத்தமிழ், கரும்புலி லெப்டினன்ட் கேணல் வினோதன், கரும்புலி மேஜர் நிலாகரன், கரும்புலி கப்டன் எழிலகன், கரும்புலி கப்டன் அகிலன், கரும்புலி கப்டன் நிமலன் ஆகியோர் வீரகாவியமாகினர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## யாழ்ப்பாணத்துக்கு ஜனவரி முதல்...

பின்வருமாறு விபரித்தனர்.

யாழ்ப்பாண பாடசாலைகளுக்கு பாடப் புத்தகங்கள் தாமதமாகவே கிடைக்கின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் கணனிப் பயிற்சி பெறுவதற்குரிய கணனி பயிலகம் இல்லை.

நாம் பயிற்சிகளை மேற்கொள்ள உடற் பயிற்சி நிலையமோ சகல வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானமோ யாழ்ப்பாணத்தில் இல்லை என்றனர்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாணவர்களின் இக்கோரிக்கைகளை விரைவில் சீர்படுத்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

அத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரான நாமல் ராஜபக்ஷவின் 'நாளைய இளைஞர்களுக்கு' என்ற அமைப்பின் மூலம் சிறந்த உடற்பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்படுமென உறுதியளிக்கப் பட்டது.

கொழும்பில் 24 மணிநேர மின்சாரம் உள்ளதுபோன்று யாழ்.மாவட்டத்திலும் சகல பிரதேசங்களிலும் 24 மணிநேர மின்சாரத்தை வழங்க வேண்டுமென மாணவர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, யாழ்.மாவட்டத்தில் தடையின்றி 24 மணிநேர மின்சாரத்தை வழங்குவதற்கென சுன்னாகத்தில் மின் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

அதற்கான பணிகள் நிறைவடைந்ததும் ஜனவரி முதல் யாழ்.மாவட்டத்தில் 24 மணிநேர மின்சாரம் கிடைக்கும் என உறுதியளித்தார்.

மேலும் யாழ்ப்பாணத்திற்கு வரும் கல்வி சார் சுற்று நிருபங்கள் அனைத்தும் சிங்கள மொழியில் வருவதுடன் புத்தாக்கல்போட்டிகள் தொடர்பிலான அறிவித்தல்கள் தாமதமாகவே கிடைக்கின்றதென சுட்டிக்காட்டிய மாணவர்கள், சிறந்த புத்தாக்கங்களை நாம் செய்வோம். அதற்கான திறமையையும் எமமிடம் உண்டு. ஆனால் அதற்கு தேவையான தொழில் நுட்ப வசதிகளோ அல்லது உரிய நேரத்திலான அறிவித்தல்களோ கிடைப்பதில்லை என ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினர்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி சகல தொழில் நுட்ப அறிவுகளையும் பெறக் கூடிய சூழலை யாழ்ப்பாண மாணவர்களுக்கு ஏற்படுத்துவேன் என உறுதியளித்தார். (ச-5)

## வன்னி படைத் தலை...

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இராணுவத்தினர், பொலிஸார் அடங்கலாக 13 பேரும் 5 பொது மக்களும் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். படையினர் 13 பேரும் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

எறிகணைத் தாக்குதலுடன் தமது இலகு ரக தாக்குதல் விமானத்தின் மூலமாகவும் புலிகள் குண்டுத் தாக்குதலை நடத்தியதுடன் வவுனியா இராணுவத் தளத்தினுள்ளே ஊடுருவியும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குண்டுத் தாக்குதலை நடத்திய விடுதலைப் புலிகளின் இலகு ரக விமானங்கள் இரண்டையும் துரத்திச் சென்ற இராணுவ விமானங்கள் முல்லைத்தீவு பகுதியில் அவற்றில் ஒன்றை சுட்டு வீழ்த்தி அழித்திருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

அதிகாலை 3 மணி தொடக்கம் காலை சுமார் 6 மணிவரை தொடர்ந்த தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் ஏவிய எறிகணைகள் பல வன்னிப் பிராந்திய இராணுவத் தலைமையக வளாகத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பெரும் சத்தத்துடன் வீழ்ந்து வெடித்தன.

அத்துடன் இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளை எதிர்த்து எறிகணைத் தாக்குதலை நடத்தியதாக படைத்தரப்பு கூறியுள்ளது. அத்துடன் விடுதலைப் புலிகளின் விமானங்களை நோக்கியும் படைத்தரப்பு தாக்குதல் நடத்தியுள்ளது.

இதேவேளை இராணுவ முகாம் பகுதியில் நன்றாக விடிந்த பின்பும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன.

இக் குண்டுச் சத்தங்களால் வவுனியா பிரதேசம் அதிர்ந்த வண்ணமிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. இதேவேளை இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் இருந்த மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்புக்கான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர். (ச)

## வவுனியா...

வுள்ளதாகவும் இந்திய தூதரக வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

எவ்வாறாயினும் கொழும்பில் உள்ள இந்திய தூதரகமோ, சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சோ இக்குழுவின் கொழும்புவருகை தொடர்பில் அதிகாரபூர்வமாக எதுவும் தெரிவிக்கவில்லை. (ச)

## புதுக்குடியிருப்பில் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகர் மற்றும் பாடசாலை ஆகியனவற்றின் மீது விமானப் படையின் கிபிர் விமானங்கள் நேற்று அதிகாலை குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

புதுக்குடியிருப்பு நகரப்பகுதி மீது அதிகாலை 4.40 தொடக்கம் 5 மணிவரை வான் படையின் மிக்-27 ரக விமானங்கள் குண்டு தாக்குதலை நடத்தின. சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை, மக்கள் குடியிருப்புக்கள், வணிக நிலையங்கள் ஆகியனவற்றை இலக்கு வைத்து வான் படையின் விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன. (ச)


### யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் மன்றத்தினரின்

## பாரதி விழா– 2008



**இடம்:** ஒட்லி மண்டபம், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

**காலம்:** 12.09.2008 (வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி)

**பிரதம விருந்தினர்:** முதுபெரும் புலவர் பண்டிதர் வை.க.சிற்றம்பலம் அவர்கள்

**சிறப்பு விருந்தினர்:** செல்வி கலாநிதி எஸ்.செல்வரஞ்சிதம் (சிரேஷ்ட விரிவுரையாளர் தமிழ்த்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

### நிகழ்ச்சி நிரல்

1. அமைதி (இறைவணக்கம்)
2. மங்கல விளக்கேற்றல்
3. தமிழ்த்தாய் வாழ்த்து
4. *தலைமையுரை:* செல்வன் ம.ஜெனிஸ்ரன் ( தமிழ் மன்றத் தலைவர்)
5. *ஆசியுரை:* அதிவண கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளார்
6. *தொடக்கவுரை:* திரு.என்.ஏ.விமலேந்திரன் (முதல்வர் யாழ்ப்பாணக் கல்லூரி)
7. பிரதம விருந்தினர் உரை
8. சிறப்புவிருந்தினர் உரை
9. *பாரதி பாடல்கள்:* கல்லூரி மாணவிகள்
10. பாரதி இசைநாட்டியம் I
11. *உரைச்சித்திரம்:* தரம் 6 மாணவர்கள்
12. *பாரதியார் கவிதைகள்:* தரம் 12 மாணவர்கள்
13. *பாரதி கண்ட புதுமைப்பெண்:* தரம் 10 மாணவர்கள்
14. பாரதி இசை நாட்டியம் II
15. *பாரதியும் பத்திரிகையும்:* தரம் 8 மாணவர்கள்
16. லயக்கோலம்
17. *நன்றியுரை:* செல்வி எல்.பி.சாவினி (தமிழ் மன்றச் செயலாளர்)
18. பாரதி இசைநாட்டியம் III
19. *இசை நாடகம்:* பிரதம பாடசாலை
20. *வில்லுப்பாட்டு:* கவிதை சிரித்தது (கல்லூரி ஆசிரியர் குழாம்)



**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**



வட்டுக்கோட்டை
09.09.2008

அதிபர்
யாழ்ப்பாணக் கல்லூரி

(C-1515)



## உதவியாளர் தேவை

றெஜிபோமில் எழுத்து, உருவங்களை வடிவமைப்பதற்கு **பெண்** உதவியாளர் தேவை (அமைவிடத்திலிருந்து 2km க்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

*சந்திக்கும் நேரம்:* காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை

**சித்தா ஸ்கிறின் பிறிண்டிங் அன்ட் றெஜிபோம் வேக்ஸ்**

இல.,49, அச்சக லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(C-1516)



## தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புப் பெறக் கூடிய முறையில் முழுநேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ **Mobile Phone Repairing**
Hard Ware — Hard Ware Repairing
Soft Ware — Phone Lock — *காலம்:- 1 மாதம்*

★ **Diploma in Hard Ware Engineering** — *காலம்:- 3 மாதங்கள்*

★ றேடியோ, ரெலிவிசன், வீடியோடெக் றிப்பியறிங்
சகல இன றேடியோக்கள், ரெலிவிசன், வீடியோடெக், CD, Amp திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். — *காலம்:- 9 மாதங்கள்*

★ ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர் சாதனப் பெட்டிகள், ஏயர் கொண்டிசன்கள் திருத்தும் முறைகள் பயிற்சியளிக்கப்படும். — *காலம்:- 6 மாதங்கள்*

★ எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங், வீட்டு மின் வேலை, மோட்டார், Fan, Transformer வைண்டிங் செய்யப்படும்முறை பயிற்சியளிக்கப்படும். *காலம்:- 6 மாதங்கள்*

**ஆரம்பம் :- 14.09.2008 (ஞாயிறு), 15.09.2008 (திங்கள்)**

**JAFFNA TECHNICAL INSTITUTE**
இல., 45 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6434, 0779254078

(C-1514)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.